PUBLIC LIBRARY
JAFFNA

Registered as a Newspaper பக்கங்கள்: 8 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 08 24-09-94 சனிக்கிழமை ஓசை 218

## ஐப்பசி 26ஆம் திகதி முதல் சூழல் கொடிவாரம் அனுஷ்டிப்பு

தமிழீழத்தில் சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் மரம் நடுகையை ஊக்குவிக்குமுகமாக ஐப்பசி 26ஆம் திகதி முதல் கார்த்திகை 1ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சூழல் பாதுகாப்பிற்கான கொடிவாரம் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். எமது தேசத்தில் சூழலை பாதுகாக்கும் நோக்கில் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் உலக சூழல் தினம் போன்ற தினங்களில் பல்வேறு செயற்திட்டங்கள் (6ஆம் பக்கம் பார்க்க)

# பூர்வாங்க பேச்சுக்கு பிரதிநிதிகள் நியமித்து தலைவர் பிரபாகரனுக்கு சந்திரிகா கடிதம்

## குழுத்தலைவராக பிரதமரின் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளுடன் ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகளை நியமித்து பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

நால்வர் அடங்கிய அரச பிரதிநிதிகள் குழுவிற்கு பிரதம மந்திரியின் செயலாளரும், சட்டத்தரணியுமான திரு. கே. பலபத்தபெண்டி தலைமை தாங்குவார் தகவல் துறை அமைச்சின் செயலாளர் திரு லயனல் பெர்னாண்டோ இலங்கை வங்கியின் பணிப்பாளர் திரு. ஆர். ஆசீர்வாதம், 'டிசைன் கொன்சோற்றியம்' என்ற நிறுவனத்தின் பணிப்பாளரும் கட்டடக்கலைஞருமான திரு என். எல். குணரெத்தினா ஆகியோரே ஏனைய பிரதிநிதிகளாவர்.

பிரதமர் சந்திரிகாவின் 21.9 94-ம் திகதியிடப்பட்ட கடிதம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வாயிலாக விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தலைவர் பிரபாகரன், ஆரம்பப் பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றுவதற்கென விடுதலைப் புலிகள் தரப்பு பிரதிநிதிகளை நியமித்து பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவிற்கு அனுப்பிய கடிதத்திற்குப் பதில் அளித்தே இக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

## புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டாமென பணிப்பு

### யாழ். செயலகத்திற்கு புதிய அரசு விடுத்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பன்முகப்படுத்த பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் புதிதாக எந்தவொரு வேலையையும் செய்ய ஆரம்பிக்க வேண்டாம் என புதிய அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

புதிய வேலைத் திட்டங்கள் எவற்றையும் இதனடிப்படையில் செய்ய ஆரம்பிக்க வேண்டாம் என்றும் ஆரம்பித்த வேலைத் திட்டங்களைத் தொடர்ந்து செய்து முடிக்கும்படியும் யாழ். செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட சுற்றறிக்கை ஒன்றில் கேட்கப்பட்டுள்ளது,

நிதி, திட்டமிடல் அமைச்சின் மாநில திட்டப்பணிப்பாளர் அரசாங்க அதிபரையும் பிரதேச செயலாளர்களையும் மேற்கண்டவாறு கேட்டுள் (6ஆம்பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்தம் ஏற்படும் வரையில் புலிகளின் தாக்குதலை நிறுத்தமுடியாது

### சிங்களப் பத்திரிகை தெரிவிப்பு

யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படும் வரையில் விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தவே முற்படுவர். இது தவிர்க்க முடியாத தொன்று என கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

படையினர் தமது நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வரும் வேளையில் புலிகளின் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த முடியாது எனவே யுத்தநிறுத்தம் ஒன்றே புலிகளின் தாக்குதல்களை நிறுத்த உதவும் என அப் பத்திரிகை மேலும்கூறுகிறது.

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்

## இ. தொ. கா. பாராளுமன்றத்தில் இனித் தனித்தே செயற்படும்

### ஐ. தே. க. செயலாளர் சபாநாயகருக்கு அறிவிப்பு

[கொழும்பு]

இதுகாலவரை பாராளுமன் தே-க, செயலர் இணைத்து சபாநாயகருக்கு அனுப்பியுள் ஆலோசனைக்கு ஏற்ப ஐ. தே-க பொதுச்செயலாளர்இந்

தல் நடத்தவே முற்படுவர். இது தவிர்க்க முடியாத தொன்று என கொழும்பி

படையினர் தமது நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வரும் வேளையில்

புலிகளின் தாக்குதல்களை நிறுத்த உதவும் என அப்பத்திரிகை மேலும் கூறுகிறது.

# ஜெனரேற்றருடன் வந்த லொறிகள் தாண்டிக்குளத்தில் தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

வட பகுதிக்கென மின்பிறப்பாக்கிகளை ஏற்றிக் கொண்டு வந்த லொறிகள் அநுராதபுரத்திற்கும் தாண்டிக் குளத்திற்கும் இடையில் சிறிலங்கா இராணுவத்தினரின் அனுமதிக்காக காத்துக் கிடக்கின்றன என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

சிறிலங்கா அரசாங்கம் வட பகுதி மீது விதித்திருந்த மின்பிறப்பாக்கிகளை எடுத்துச் செல்வதற்கான தடையை தளர்த்தியமையைத் தொடர்ந்து தனியார் துறையினரே இம் மின் பிறப் பாக்கிகளை கொழும்பில் கொள்வனவு செய்து லொறிகளில் எடுத்து வந்துள்ளனர்.

இதனை அடுத்து இராணுவத்தினரின் வட பகுதிக்கு லொறிகளை அனுமதிப்பதற்கான அனுமதிப் பத்திரத்தினைப் பெற லொறிகள் காத்துக் கிடக்கின்றன என தெரியவருகிறது.

இது இவ்வாறு இருக்க, கொழும்பில் மின்பிறப்பாக்கிகள் விற்பனை செய்யும் இடங்களில் கையிருப்புத் தீர்ந்து வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

(பா, தி)

## காணாமற்போன மீனவர் குறித்து தகவல் இல்லை

நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை பூநகரி-காஞ்ச காட்டுப் பகுதியில் வைத்து சிறிலங்கா கடற்படையால் நிர்மூலமாக்கப்பட்ட குருநகர் மீன்பிடி வள்ளத்தின் சேதமடைந்த ஒட்டம் பலகை மற்றும் சவள், மரக்கோல், பிடித்து வந்த மீன்கள் என்பன நேற்றுக் காலை பூநகரி-பெரியவேலிப் பகுதியில் கரை ஒதுங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தின்போது காணாமல்போன குருநகர் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த போசெப் பெரியராசு (வயது 50) என்பவர் பற்றிய நிலைமையை நேற்று மாலை இச்செய்தி எழுதப்படும்வரை அறியமுடியவில்லை.

(6ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் புலிகள் கொமாண்டோ தாக்குதல்

## இரு படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய கொமாண்டோ தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. இத்துணிகரத் தாக்குதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

கடந்த 21-ம் திகதி பிற்பகல் இரண்டு மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் 39-ம் கிராமத்தில் காவல் நின்ற இராணுவத்தினர் மீதே உழவுயந்திரத்தில் சென்ற விடுதலைப் புலிகள் துணிகரக் கொமாண்டோத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன்போது இரு படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ | ரி 56-2 ரக துப்பாக்கி | - 01 |
| ★ | இதன் ரவைக்கூடு | - 08 |
| ★ | நடுத்தர ரவைகள் | - 205 |
| ★ | ஏ.கே. கோள்சர் | - 02 |
| ★ | ஜே.ஆர். ரக குண்டு | - 02 |
| ★ | தொப்பி | - 02 |
| ★ | மில்ரி பெலிற் | - 01 |

பெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்

## வீதி விபத்துகளில் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ் நகரில் நடைபெற்ற மூன்று வீதி விபத்துக்களில் மூவர் காயமடைந்து யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

[6ஆம் பக்கம் பார்க்க]

[கொழும்பு]

இதுகாலவரை பாராளுமன்றத்தில் ஐ. தே. கவுடன் இணைந்திருந்த தொண்டமானின் இ. தொ. கா. பாராளுமன்ற குழு இனி தனித்துச் செயற்படும். இதற்கான கடிதத்தை சபாநாயகர் கே பி. இரட்ணாயக்காவிற்கு ஐ-தே-க செயலாளர் காமினி விஜயசேகர அனுப்பியுள்ளார்

கடந்த தேர்தலில் ஐ தே க. இ- தொ- கா. உடன்படிக்கை செய்து கொண்ட கடித நகலையும் இந்துடன் ஐ தே-க, செயலர் இணைத்து சபாநாயகருக்கு அனுப்பியுள்ளார்- எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்காவின் ஆலோசனைக்கு ஏற்ப ஐ. தே-க பொதுச்செயலாளர் இந் நடவடிக்கையை எடுத்துள்ளார்-

# 48 மணி நேரத்தில் 8 படையினர் பலி

(கொழும்பு)

கடந்த 48 மணிநேரத்தில், விடுதலைப்புலிகளின் தாக்குதலில் எட்டு படையினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மன்னார் மாவட்டத்தில் தாராபுரம் என்னுமிடத்தில், ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் நேற்று முன்தினம் இருவர் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



கப்டன் இளம்பிறை

மட்டக்களப்பு 39-ம் கிராமத்தில் காவல் நின்ற இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் நடத்திய துணிகர கொமாண்டோ தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஜே. ஆரின் கௌரவம் மூழ்கடிக்கப்பட்டது

[கொழும்பு]

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை கௌரவிக்கும் முகமாகவே மூழ்கடிக்கப்பட்ட கப்பலுக்கு முன்னர் எம் வி. சாகரவர்த்தனா என பெயரிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

திங்கள் இரவு 11 30 மணியளவில் இக் கப்பல் ரோந்து சென்று கொண்டிருந்தபோது இரு படகுகள் வந்து கப்பலுடன் மோதியதில் கப்பல் தகர்ந்தது எனவும் மீன் பிடிப் படகுகள் நெருங்குவதாக நினைத்த கடற் படையினர் அவற்றை சோதனையிட முயன்றபோது குண்டுகள் வெடித்ததாக இராணுவ விசாரணை

(6ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் கிட்டு சிறுவர் பூங்கா திறந்திருக்கும் நேரங்கள்

கேணல் கிட்டு நினைவு சிறுவர் பூங்கா கிழமை நாட்களில் பிற்பகல் மூன்று மணி முதல் இரவு பத்துமணிவரை மக்கள் பார்வைக்காக திறந்திருக்கும் எனவும் சனி, ஞாயிறு மற்றும் ஏனைய விடுமுறைதினங்களில் முற்பகல் பத்து மணி முதல் இரவு பத்து மணிவரை திறந்திருக்கும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

மேலும் மாணவர்களை அழைத்துவரும் பாடசாலைகள் பூங்கா நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு விசேட

(6ஆம் பக்கம் பார்க்க)

# தியாகி திலீபன் நினைவு நிகழ்வில் பறவைக்காவடி, ஊர்தி பவனி

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவின் ஒன்பதாம் நாள் நிகழ்வில் ஆட்டக் காவடிகள், பறவைக் காவடிமற்றும்கோட்டை வடிவிலான ஊர்தி ஆகியன பங்கேற்று சிறப்பித்தன.

குடாநாடு தழுவலாக நேற்று நடைபெற்ற நிகழ்வுகளில் தனியார் போக்குவரத்துச் சங்கங்கள் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலம் ஒன்று, ஒன்றிய பணிமனையிலிருந்து புறப்பட்டது. தியாகி திலீபனின் உருவப்படம் தாங்கிய கோட்டை வடிவிலான ஊர்தி மற்றும் இரண்டுபேர் கொண்ட பறவைக் காவடியும் ஊர்வலமாக நல்லூர் முன்றலை வந்தடைந்தன.

இதேவேளை சண்டிலிப்பாய் கல்வளை கிராம மக்களின் ஆட்டக்காவடிகள் அங்கிருந்து ஊர்வலமாக நல்லூரை வந்தடைந்தன. தியாகி திலீபனின் தியாக உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் புத்தூர் மேற்கு 'கலைமதி' கிராம மக்களின் ஆட்டக் காவடியும் நல்லூரை வந்தடைந்தது.

வழமைபோலவே நேற்றைய தினமும் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் திலீபனின் நினைவாக சிரமதானங்கள் நடைபெற்றன.

பொதுமக்கள், வர்த்தகர்கள், அரசாங்க ஊழியர்கள் என பலர் திரண்டு வந்து கலந்துகொண்டனர்.

விசேட பந்தல்களில் வைக்கப்பட்டுள்ள திலீபனின் உரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### Yogi Home Science Academy

கேக் ஐசிங், மாச்சீனிமலர்கள் (Sugar Craft) மேலைத்தேய ஐசிங் (Fondant Icing) சமையற்கலை, ஒப்பனைக்கலையும், தலை அலங்காரமும் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகி உள்ளன. சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்:

71 B, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர் (9499)

### மிருதங்க வகுப்பு

தரமான ஆசிரியர் மூலம் ஆரம்பம் முதல் ஆசிரியர் வகுப்பு வரை மிருதங்க வகுப்புகள் நடைபெறுகின்றன: விரும்பியோர் தொடர்புகொள்ளவும்: கோவிந்தபிள்ளை விஜயகுமார் 192/1 நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (9474)

### ஆண்டு 4

ஆண்டு 4 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்(1996) மாதிரி வினாத்தாள் (தமிழ், கணி, ஆங்கிலம்) 25-09-94 ஞாயிறு வெளியிடப்படும் தேவையானோர் தொடர்பு கொள்ளவும்: புலமைப்பரிசில் மாதிரி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (9503)


## விளையாட்டுப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

செவிப்புலன் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக்கழகத்தினரால் நாளை நடாத்தப்படவிருந்த தடகள விளையாட்டுப் போட்டி, தவிர்க்க முடியாத காரணங்களினால் அடுத்த மாதம் 2ஆந் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என மேற்படி விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.

## சுயதொழில் கடன் வழங்கல்

வறுமைக் கோட்டின் கீழ் வாழும்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் அண்மையில் வடமராட்சிப் பகுதியில் உள்ள 56 பயனாளிகளுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் சுயதொழில் ஊக்கு

## மருத்துவர், ஊழியர்களுக்கு மன்னாரில் தட்டுப்பாடு

மன்னார் பகுதி வைத்திய சாலைகளில் மருத்துவர்களுக்கும், மருத்துவ ஊழியர்களுக்கும் பெருந்தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருந்துகளும் சரிவரக் கிடைக்காமல் நோயாளர்கள் திண்டாடுவதாகவும் தெரியவருகின்றது.

## குடும்பநல உதவியாளர் வெற்றிடம் நிரப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபை வைத்திய அதிகாரி பிரிவில் வெற்றிடமாக உள்ள குடும்ப நல உதவியாளர் இடங்கள் நிரப்பப்படவுள்ளது.

நேர்முகப்பரீட்சையில் சித்தியடையும் 29 பயிற்சியாளர்களைக்கொண்டுமேற்படி வைத்திய அதிகாரி பிரிவில் குடும்பநலஉதவியாளரிற்கானவெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளது.

இவர்களிற்கான மாதாந்த சம்பளத்தை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் வழங்குவதற்கு பொறுப்பேற்றுள்ளது.

இதேவேளை யாழ் குடாநாட்டிலுள்ள ஏனைய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் குடும்பநல உதவியாளரிற்கு 231 வெற்றிடங்கள் இருக்கின்றன. இவ்வெற்றிடங்கள் இருந்தும் வைத்திய அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் இப்பிரிவுகளில் பயிற்சியாளரை பயிற்றுவிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது. இதனால் இவ்வெற்றிடம் தொடர்ந்தும் நிரப்பப்படாமலேயே உள்ளது.

மேலும் யாழ் குடாநாட்டில் 260 உதவியாளர் தேவைப்படுவதாகவும் இதற்கு தற்போது 83 பேரே சேவையில் உள்ளதாகவும் தெரியவருகிறது. (88) [நி]

## யாழ்.சர்வோதய அலுவலக கூரை திருத்தப்படுகிறது

சர்வோதயத்தின் யாழ் கிளை அலுவலக கூரை திருத்த வேலைகள் நடைபெறுகின்றன.

இத்திருத்த வேலைக்கான அனுமதியும் பணமும் கொழும்பு தலைமை அலுவலகத்தில் இருந்து நீண்ட நாட்களாக கிடைக்கப் பெறாமல் இருந்தது.

வரப்போகும் மழைகாலத்தை கருத்தில் கொண்டு மேற்படி அலுவலக அதிகாரியின் முயற்சியினால் அனுமதியும் பணமும் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதைத் தொடர்ந்து மேற்படி நிறுவனத்தின் அலுவலக கூரை திருத்த வேலைகள் நடைபெறுகின்றன. (88)

## பிரதேச நிர்வாகங்களில் மாற்றங்கள் வரும்

### அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதேச நிர்வாகங்களில் மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளன பிரதேச செயலாளர்கள் முதல் கிராம அதிகாரிகள் வரை மாற்றங்கள் அமுல் செய்யப்படும் என மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் கூட்டுறவுத்துறை பிரதியமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்

கிராம அதிகாரிகள் மட்டத்தில் தொண்டர் குழுக்களை அமைக்கும் யோசனையும் அரசிடமிருப்பதாகவும்அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### பிரி. மருத்துவ கவுன்சிலின் அங்கீகாரம்

## யாழ். பல்கலைகழகத்திற்கு இன்னும் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் பிரித்தானிய மருத்துவக் கவுன் சிலினால் அங்கீகரிக்கப்படாத பல்கலைக் கழகமாகும் இதன் காரணத்தினால் வட பகுதி மாணவர்கள் தென் பகுதிகளில் கல்வி பெறுகின்ற மாணவர்கள் தமது கல்வியை முடித்துக் கொண்டு பிரித்தானியா சென்று அங்கு உயர் கல்வியைமேற்கொள்ளவோ அல்லது தொழில் செய்யவோ அல்லது வேறு நோக்கல்களுக்


## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் யாழ் கோட்டம்

### முக்கிய அறிவித்தல்

25-09-94 ஞாயிற்றுக்கிழமை சகல தனியார் கல்வி நிறுவனங்களையும், பிரத்தியேக வகுப்புகளையும் மூடி நல்லூரில் நடைபெறும் தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ளவும்

இயக்குநர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் காலை 8-00 மணிக்கு நல்லூரில் சமூகமளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்

(சி-10402) யாழ் கோட்டம்

## வடபிராந்திய வணிகர் கழகங்களின் சமாஜம்

### முக்கிய அறிவித்தல்

1994 - 1995-ம் ஆண்டிற்கான பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 02 - 10 - 94 ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணிக்கு 21, மேல்மாடி, நவீன சந்தை, யாழ்ப்பாணம் பணிமனையில் நடைபெறுமென்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி

(சி-10403) -செயலாளர்

## முக்கிய அறிவித்தல்

வலி- கிழக்கு வர்த்தகர் சங்கம்

(கோப்பாய் வட்டப் பிரிவு)

எமது மண்ணின் விடிவிற்காக உண்ணாநோன்பிருந்து ஈகச்சாவடைந்த

### லெப். கேணல் தியாகி திலீபன்

அவர்களின் 7-ம் ஆண்டு அடையாள உண்ணாநோன்பின் 11-ம் நாளினை சிறப்பிக்கும் முகமாக (நாளை) 25-09 94ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7, 30 மணிக்கு நீர்வேலி கந்தசாமி கோவில் வீதியில் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள பந்தலில் மேற்கொள்ளவிருக்கும் அடையாள உண்ணா விரதத்தில் கோப்பாய் வட்டப் பிரிவுக்குட்பட்ட வர்த்தகர்கள். ஊழியர்கள், பொது மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:- விதி விலக்களிக்கப்பட்ட வாணிபம் செய்பவர்கள் அன்றையதினம் வணிக நிலையத்தை முழுமையாக பூட்டி நிகழ்வில் கலந்து கொள்ளவும்.

செயலாளர்

வலி-கிழக்கு வர்த்தகர் சங்கம்-

[9502]

## நன்றி நவிலல்

நிகழும் பவ வருடம் ஆவணி மாதம் 6 ஆம் திகதி (22 - 8 - 1994) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் கு. வே. நவரெத்தினம்

[இளைப்பாறிய ஆசிரியர்]

அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் ஒத்தாசை நல்கிய அனைவருக்கும், கடந்த 21-9-1994 புதன்கிழமை நடைபெற்ற அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளில் கலந்து கொண்டு அவரது ஆத்ம சாந்தி பூசையிலும் மதிய போசனத்தி


## மலேரியா தடுப்பிற்கு புதிய மருந்து அறிமுகம்

மலேரியா நோயை தடுப்பதற்கு ஐகோன் எனும் புதிய மருந்து பாவிக்கப்படலாமென மலேரியா தடுப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் இம் மருந்து பாவிக்கப்பட்டதன் பின் மலேரியா பரவுவது கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகவும், மலத்தியன் தெளிக்கப்பட்டும் மலேரியாவை கட்டுப்படுத்த முடியாத நிலையில் இம் மருந்தின் பிரயோகம் பலனளித்துள்ளதாகவும் மலேரியா தடுப்பு இயக்கம் மேலும் தெரிவித்துள்ளது.

## இலங்கைத் தேயிலையில் ஆர்சனிக் நஞ்சு

### ஐரோப்பிய சமூகம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் தேயிலையில் ஆர்சனிக் நஞ்சு கலந்திருக்க கூடுமென ஐரோப்பிய சமூகம், ஜேர்மன் சுகாதார அதிகார வட்டாரங்களை எச்சரிக்கை செய்துள்ளது.

மேலும், இலங்கையிலிருந்து இறக்குமதியாகும் சகல தேயிலை வகைகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்டவையும், கப்பலில் அனுப்பப்படுபவையும் இப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

## தேசியப் பாடசாலைகள் அமைப்பில் குறையுள்ளது

### மகாநாட்டில் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசியப் பாடசாலைகள் விடயத்தில் சரியான வளப் பங்கீடோ, நிர்வாக அமைப்போ அமைக்கப்பட்டுள்ளதாக தெரியவில்லை குறிப்பிட்ட ஒரு மாவட்டத்தில் 27 தேசியப்பாடசாலைகள் இருக்கும் இடத்தில், சில மாவட்டங்களில் ஒரு தேசியப் பாடசாலை கூட அமைக்கப்படவில்லை என கொழும்பில் நடைபெற்ற கல்வியமைச்சின் முக்கிய மகாநாடொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா, பொலனறுவ மாவட்டங்களில் ஒரு தேசியப்பாடசாலை கூட இல்லை 84ம் ஆண்டில், 18 தேசியப் பாடசாலைகளே நாட்டிலிருந்தன ஆனால் இன்று 160 ஆக இது வளர்ந்துள்ளது: பதுளை 27, கொழும்பு -17, கம்பகா -5, களுத்துறை - 05, கண்டி - 16, மாத்தளை -01, நுவரெலியா -02, காலி -10, மாத்தறை -08, அம்பாந்தோட்டை -12, யாழ்ப்பாணம் - 04, அம்பாறை - 0.5, திருகோணமலை -05, மட்டக்களப்பு -02 குருநாகல் -08, புத்தளம் -03, அனுராதபுரம் - 03, மொனராகலை - 09, இரத்தினபுரி - 10, கேகாலை - 07 என இவை அமைந்துள்ளன.

சில தேசியப் பாடசாலைகள், ஆய்வு கூட வசதிகளைக் கூட கொண்டிருக்கவில்லை. எண்ணிக்கையை பெருக்குவதற்காக தேசியப் பாடசாலைகள் அமைப்பதில் பயனில்லை எனவும் அம்மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## கோழிகளுக்கு தடுப்பூசி

(கொழும்புத்துறை)

வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய சாலையில் பிரதி சனிக்கிழமைகள்தோறும் கோழிகளுக்கு நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது.

இப் பிரதேசத்தில் ஜன சக்தித் திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட விலங்குகளின்போசாக்கு, சுகாதாரம், நோய்த்தடுப்பு, இனப்பெருக்கம் ஆகியன பற்றியும் வைத்திய சாலை உத்தியோகத்தர் அறிவுரை வழங்கி வருகிறார். [24]


## நினைவு கூருகின்றோம்...

24 09 1994

விப்புக்கடன்கள் வழங்கப்பட்டன.

இதன்படி உடுப்பிட்டி தெற்கில் 18 பயனாளிகளுக்கும், கெருடாவில் தெற்கில் 38 பயனாளிகளுக்கும் ஒரு பயனாளிக்கு தலா 10,000 ரூபாவீதம் இக்கடன்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## றுகுணுவில் பொறியியல் பீடம்

தென்னிலங்கையில் றுகுணுவில் பொறியியல் பீடம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகள் நடை பெற்றுவருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் உத்தியோக பூர்வமாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனினும் தென்னிலங்கைப் பத்திரிகைகளில் இது தொடர்பான செய்திகள் முக்கியம் கொடுத்து பிரசுரிக்கப்பட்டு வருவதாகவும் அத்தகவல்கள் மேலும் தெரிவித்தன.

(பா)

## நூல்கள் வந்தன

பயிலுநர் ஆசிரியர்களிற்கான வழிகாட்டி நூல்கள் மற்றும் பட்டப்பின் டிப்புளோமா மாணவர்களிற்கான நூல்கள் நீண்ட நாட்களின் பின்பு தற்பொழுது கொழும்பில் இருந்து யாழ் குடாநாட்டிற்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

இவற்றில் இன்னும் ஒரு பகுதி நூல்கள் திருமலை துறைமுகப்பகுதியில் காத்துக் கிடக்கின்றன.

தற்பொழுது வந்து சேர்ந்துள்ள மிகுதி நூல்கள்கொழும்பில் இருந்தேகொண்டு வரப்பட்டதாக தெரியவருகிறது. (88) (பா)

பகுதி மாணவர்கள் தென் பகுதிக்கு இடம்பெயர்ந்து அங்குள்ள பிரித்தானிய மருத்துவக் கவுன்சிலினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களில் தமது கல்வியை தொடருகின்றனர் என யாழ் பல்கலைக் கழக வட்டாரங்களில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் மூன்று பல்கலைக் கழகங்களேபிரித்தானிய மருத்துவக் கவுன் சிலினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இவை கொழும்புப் பல்கலைக் கழகம், பேரதெனியா, பல்கலைக் கழகம், றுகுணு பல்கலைக் கழகம் என்பனவே ஆகும்.

எனவே இப்பல்கலைக் கழக வேறு நோக்கல்களுக்காக தங்கியிருக்கவோ அனுமதிக்கப்படுகின்றனர். இதற்கு பிரித்தானிய அரசும் அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால் யாழ் பல்கலைக் கழகத்தில் கல்விபெறும் மாணவர்களுக்கு இவ்வாறான சலுகைகள் கிடைப்பதில்லை எனவே வட பகுதியில் இருந்து பெரும் எண்ணிக்கையினாலான மாணவர்கள் காலத்திற்குக்காலம் தென்பகுதிகளில் உள்ள பிரித்தானிய மருத்துவக் கவுன் சிலினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர் என தரவுகள் தெரிவிக்கின்றன. (பா)

## உயிரியல்துறைக்கு முக்கிய இடம் வழங்கப்படும்

கல்வித்திட்டங்களில் உயிரியல் துறைக்கு முக்கியத்துவமளிக்கப்படவுள்ளதாக விஞ்ஞான கைத்தொழில் துறை அமைச்சர் பேர்னாட் சொய்சா தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகக் கல்வியிலும் இத்துறைக்கு கூடிய கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

## காதலித்த பெண்ணை கைவிட்டவருக்கு

### அறுபது மாதங்கள் சிறை

(தென்மராட்சி)

ஒரு பெண்ணை காதலித்து தாய்மையடையச் செய்த பின் கைவிட்ட ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் அறுபது மாதங்கள் சிறைத் தண்டனையும், பாதிக்கப்பட்ட பெண்ணின் கருவில் இருக்கும் பிள்ளைக்கு பதிவுப் பெயர் பதியவும், சேமிப்பு பணமாக ஐம்பதினாயிரமும், இழப்பீடாக ஒரு இலட்சம் ரூபாவும் வழங்க வேண்டுமென தீர்ப்பளித்துள்ளது-

குறித்த எதிராளி, மனுதாரரை திருமணம் செய்யத் தவறின் மேற்குறிப்பிட்ட தண்டனைகளுக்கு உள்ளாவார் என தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (86)

## பொதுச்சபை கூட்டம்

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபை சுழிபுரம் உபஅலுவலக சன சமூக நிலையங்களின் உபசமாஜ விசேட பொதுச்சபைக் கூட்டம் இன்று முற்பகல் 9-30 மணியளவில் சுழிபுரம் உப அலுவலக பிரதான மண்டபத்தில் உபசமாஜத் தலைவர் திரு. தி. உதயசூரியன் தலைமையில் நடைபெறும். (41)


அவரது ஆத்ம சாந்தி பூசையிலும் மதிய போசனத்திலும் பங்கு பற்றிய அனைவருக்கும் எமது நன்றியறிதலை தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி- நாகபூரணம்
மகன்மார்- சிறிஸ்கந்தன் [உரும்பிராய்]
சிவசீலன் J. P. [ நீர்வேலி ]
[விலை கட்டுப்பாட்டு அதிகாரி]
சர்வ குணசீலன் [G.S]
(கோண்டாவில்)

16/2 நவபதி
விதானையார் வீதி,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

[9454]

## 6-ம் நாள்கண்ணீர் அஞ்சலி



### கப்டன் மயூரன்

(சிறிஜெயச்சந்திரன் ஜெயரூபன்)
(மந்துவில் கொடிகாமம்)

கொடிகாமம் பனை தெ. வ. உ. வி. கூ. சங்கத்தின் அங்கத்தவரும், 210 சீ, கிளையின் கிளைக்குழுத் தலைவருமான செ. சிறிஜெயச்சந்திரன் இராசம்மா அவர்களின் அருமை மகன் கப்டன் மயூரன் வீரச்சாவடைந்துள்ளார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவிப்பதுடன் இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பணிப்பாளர்கள், பணியாளர்கள்**
ப. தெ. வ. அ. கூ. சங்கம்

(சி-10401) (9467)

## 24. 09 1994.

1990-ம் ஆண்டு இதேதினத்தில் முல்லைத்தீவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மிதிவெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**நேசன்** (நாராயணபிள்ளை தவனேசன்-கந்தளாய் -திருமலை)

1991-ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். திலீபன்** (ஜெகநாதன் கௌதமன்-பெரியகல்லாறு-01-மட்டு)

**2-ம் லெப். ரஞ்சன்** (சுந்தரம் சண்முகநாதன்-மாங்கேணி, வாழைச்சேனை-மட்டு)

**தமிழ்வாணன்** (இராசதுரை குலம்-முகத்துவாரம் -மட்டு)

**அற்புதன்** (கணபதிப்பிள்ளை மகேந்திரன்- தம்பலகமம்- திருமலை)

**2-ம் லெப். குமரன்** (தில்லைனார் உதயகுமார்-132, செல்வபுரம்-வவுனிக்குளம்)

**கப்டன் வரதப்பா** (தங்கவேலாயுதம் விஜயராஜ் -மயிலிட்டி-யாழ்)

**2-ம் லெப். மகிழன் - டான்சன்** (இராமலிங்கம் சண்முகம் பொன்குமார்-கொழும்புத்துறை-யாழ்)

**யசீர்** (சியாமளாதேவி ஆனந்தன்-அரசடி,தொண்டமானாறு-யாழ்)

**விக்னம்** (இளங்கோ பரணிதரன்-கரவெட்டி-யாழ்)

1992 ம் ஆண்டு மட்டு-வண்ணாத்தியாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய,

**சித்திரா** (சுந்தரலிங்கம் கமலசூரியன்-சோனகத் தெரு-மட்டு)

**நவபாலன்** (சிவராசா சுதாகரன்-மொறக்கொட்டாஞ்சேனை-மட்டு)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10395)

PUBLIC LIBRARY JAFFNA

## தலைவரின்பி.பி.சிபேட்டிக்கு மு.காங்கிரஸ் வரவேற்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில், வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழ்பேசும் மக்களின் தாயகம் என கூறியிருப்பது, புலிகளின் முன்னேற்றகரமான ஆரோக்கியமான அரசியல் நிலைப்பாட்டை காட்டுவதாக முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, அதன் துணைத் தலைவர் மருதூர்க்கனி வெளியிட்ட அறிக்கை ஒன்றில், புலிகளின் நிலைப்பாடு தமிழ் முஸ்லிம் உறவுகளை மீண்டும் வளர்ப்பதற்கும், வட-கிழக்குப் பிரச்சினையை தீர்ப்பதற்கும் கட்டியம் கூறிநிற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரசின் செயற்பாடுகளால் பயங்கர சூழல் தோன்றும்

### கலாநிதி சுசந்த மத்துமபண்டார

(கொழும்பு)

புதிய அரசாங்கம் உயர் அதிகாரிகள் மற்றும் பொலிசார் மீது எடுத்துவரும் நடவடிக்கைகள் பயங்கரமான சூழ்நிலையை தோற்றுவிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த கலாநிதி சுசந்த மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் அரசியல் பழிவாங்கல்களை நோக்காக கொண்டு செயற்படுவதாகவும் இதற்கு எதிராக தமது கட்சி கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இந்திரனின் கொலையுடன் புளொட்டுக்கு தொடர்பு

(கொழும்பு)

வவுனியாவில இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வைத்து ஒரு குழந்தைக்கு தந்தையான இந்திரன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் புளொட்குழுவினருக்கு தொடர்புஇருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் அமைத்துள்ள தமிழ் ரெஜிமென்டில் இணைந்து செயற்பட்டவரான இந்திரன் புளொட் இயக்கத்தின் அலுவலகத்துக்கு சமீபமாக வைத்து ஒன்பது எம். எம். பிஸ்டலால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். இதற்கும் முன்பாக அஸீஸ், வண்ணன் என்பவர்கள் உட்பட இப்படைப் பிரிவைச் சேர்ந்த நால்வர் புளொட் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இத்தகையவர்களது உயிரிழப்பு தொடர்பாக சிறிலங்கா இராணுவத்தினர் கண்டுகொள்வதே இல்லை எனவும், மரண வீட்டில் கூட இராணுவத்தினரோ, இராணுவ அதிகாரிகளோ கலந்து கொள்வதும் இல்லை எனவும் கூறப்படுகிறது.

## சட்ட ஆணைக்குழு ஜனாதிபதியால் நியமனம்

(கொழும்பு)

12 பேர் கொண்ட சட்ட ஆணைக்குழுவொன்றை, நீதி அரசியலமைப்பு அமைச்சரின் சிபார்சுக்கிணங்க ஜனாதிபதி நியமித்துள்ளார்.

உயர்நீதிமன்ற நீதியரசர் அமரசிங்க தலைவராகவும், பதில் சட்டமா அதிபர் எம். எஸ். அசீஸ், கே. கனகஈஸ்வரன் ஆகியோரும் இவ் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

## அரசாங்க காணிகளை மலிவாக விற்க முயற்சி

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற் ... மேற்கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கோட்டை

# பாராளு. செல்லாமைக்கு கப்பல் தகர்ப்பே காரணம்

(கொழும்பு)

பிரதமர் கடந்த செவ்வாய் உரிய நேரத்தில் பாராளுமன்றத்திற்கு சமுகம் அளிக்க முடியாமை கடற்படை கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்ட காரணமாகும் என பிரதமர் அலுவலக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடற்படைக்கப்பல் மீதான தாக்குதல் தொடர்பாக அதிகாலை பிரதமருக்கு தகவல் கிடைத்ததாகவும் இதனைத் தொடர்ந்து சில அமைச்சர்களுடன் அவசர பேச்சுவார்த்தை நடத்தவேண்டி இருந்ததாகவும் அப்பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் இவ் உடனடி நடவடிக்கையை தொடர்ந்தே அடுத்த கட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதன் காரணமாக உரியநேரத்தில் பாராளுமன்ற கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது போனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உணவு முத்திரைத் திட்ட நிதியை அதிகரிக்க முடிவு

[கொழும்பு]

உணவு முத்திரைத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டை புதிய அரசாங்கம் அதிகரிக்க தீர்மானித்துள்ளது.

மிகவும் வறிய மக்களுக்கான உணவு முத்திரை விநியோகத்திட்டத்திற்கென 19 கோடி 50 லட்சம் ரூபாவை ஒதுக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது. மண்ணெண்ணெய் விநியோகத்திற்கென 6 கோடி 50 லட்சம் ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

பாடசாலைப் பிள்ளைகளுக்கான மதிய உணவு முத்திரைக்கென 115 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது.

இவ்வருட வரவு செலவுத் திட்டத்தின் குழுமதிப்பீட்டின் கீழ் இதற்கு 140 கோடி ரூபா வழங்கப்படும். திறைசேரி முற்பணமாக 60 கோடி ரூபாவை உடனடியாக வழங்கும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்தார்.

## அவுஸ்திரேலியா உதவி

(கொழும்பு)

திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய அவுஸ்திரேலிய அரசாங்கம் உதவி புரியவுள்ளது.

திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதில் நீண்டகாலமாகவே அவுஸ்திரேலியா ஆர்வம் காட்டி வருவதாகவும் அவுஸ்திரேலிய தூதுவர் தெரிவித்துள்ளார்.

## வடமராட்சி விநாயகர் சிலை உடுநுவரவில் கண்டுபிடிப்பு

வடமராட்சியில் ஒப்பரேஷன் லிபரேஷன் நடவடிக்கையின்போது, இராணுவத்தினரால் களவாடப்பட்டதென கருதப்படும், வெண்கலத்தாலான விநாயகர்சிலையொன்று உடுநுவர ரங்கம என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

62 கிலோ கிராமுடையு எடைய இரண்டடி உயரமுள்ள இவ் விநாயகர் சிலையின் ஒரு பகுதி தட்டிச் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிற்பவேலை செய்யும் ஒருவரிடமிருந்து இச்சிலையை பொலிசார் கைப்பற்றியுள்ளதாக கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# அருகில் அழைத்து குட்டியதுபோல் தேர்தல்முடிவுகள் அமைந்தன

### காமினி திசாநாயக்கா தெரிவிப்பு

ஐ. தே. கட்சியை மக்கள் அருகில் அழைத்து தலையில் குட்டி அனுப்பியுள்ள வகையில் அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளதாக ஐ. தே. கட்சியின் தலைவர் காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

மக்களின் குட்டுக்குப் பயந்து கட்சி மக்களில் இருந்து தூரத்தே போனதால் மேலும் மக்கள் ஆதரவை இழக்க வேண்டி ஏற்பட்டதாகவும் இச்சந்தர்ப்பத்தை பொ. ஐ. முன்னணி தக்கமுறையில் பயன்படுத்தி மக்களை அணைத்துக் கொண்டதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

ஐ. தே. கட்சி மீண்டும் மக்களிற்கு அருகில் வந்து தனது மனப்பூர்வமான சேவையைச் செய்து மக்களோடு மக்களாக சேர்ந்து, வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# தடுத்து வைக்கப்பட்டோர் விபரம் உறவினரிடம் கோரப்படுகிறது

(கொழும்பு)

... ட்டி'' எனக் குறிப்பிடவேண் ... சிவா செல்லையா, பிரதி ...

## வாழ்க்கை செலவுப்படி ஒய்வூதியருக்கு கிட்டும்?

(கொழும்பு)

1988-ம் ஆண்டு ஜனவரி முதலாந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பதவியிலிருந்து ஒய்வு பெற்ற அரசாங்க ஊழியர்களுக்கும், வாழ்க்கைச் செலவுப் படியான 260 ரூபாவை மாதாந்தம் வழங்குவது குறித்து பொது நிர்வாக அமைச்சு ஆராய்ந்து வருகின்றது.

இதற்காக அமைச்சரவையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படும். வாழ்க்கைச் செலவுப்படி தற்சமயம் 1993 ஜூன் முதலாம் திகதிக்குப் பின்னர் ஒய்வுபெற்ற ஊழியர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது எனவும், இதனால் இரண்டு இலட்சத்து எழுபத்தேழாயிரம் ஒய்வூதியர்கள் நன்மையடையவுள்ளனர் இவர்களுக்கு நிலுவைகளும் வழங்கப்படும். இதற்கு அரசாங்கத்திற்கு 365கோடி 50 இலட்சம் ரூபா செலவாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கட்சி மோதலை தடுக்க ஏறாவூருக்கு இராணுவம்

ஏறாவூர் பிரதேசத்தில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களை தடுக்கும் முகமாக மேலதிக இராணுவம் மற்றும் பொலிசார் அங்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

பொதுத்தேர்தலை அடுத்து கட்சி மோதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

கல்விக் கொள்கைகள்

## அடிக்கடி மாற்றப்படுவது நாட்டு நலனை பாதிக்கும்

### பௌத்த பீடாதிபதிகள் கவலை

(கொழும்பு)

கல்விக் கொள்கை வகுக்கும் போது ஆசிரியர்கள் மாணவர்கள் இணைந்த கொள்கையே வகுக்கப்பட வேண்டும். அதிகாரிகள் மட்டத்திலான கல்விக் கொள்கை வகுக்கப்படக் கூடாது என அஸ்கிரிய மல்வத்த பீடங்களைச் சேர்ந்த பீடாதிபதிகள் புதிய கல்வி அமைச்சர் நிச்சட்பத்திரானவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாட்டில் ஆட்சி மாறினாலும் கல்விக் கொள்கைகள் மாற்றப்படக் கூடாது கல்விக் கொள்கைகள் அடிக்கடி மாற்றப்படுவது கல்வியின் நலன்களைப் பாதிக்கும் என்றும் தெரிவித்துள்ளனர்.

கல்விக் கொள்கைகள் மாற்றப்படுவதாக இருந்தால் சகல ஆசிரியர்கள் மாணவர்கள் இணைந்த கொள்கையாக அமைவதே கல்வியின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் எனவும் மேலும் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலில்

## பொ.முவின் பிரசாரத்துக்கு அனுருத்தவே பொறுப்பு

ஜனாதிபதி தேர்தலுக்கான பொது ஜன ஐக்கியமுன்னணியின் பிரசார நடவடிக்கைகளுக்கு அனுருத்த ரத்வத்த பொறுப்பாக இருப்பார் என தெரிய வருகிறது.

இதற்காக இவரது தலைமையிலான குழுவொன்று தேர்தல் செயற்பாடுகளை கொண்டு நடத்த அமைக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமரவீர வீரவன்னியின் பிணைமனு நிராகரிப்பு

(கொழும்பு)

பிரதி அமைச்சர் சமரவீர வீரவன்னி, பதுளை நீதிமன்றத்தில் சமர்ப்பித்த பிணை மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் 16-ம் ... விக்கிரமரட்ண என்பவரின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சமரவீர வீரவன்னி தடுத்து வைக்கப்பட்டிருப்பது

(கொழும்பு)
கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும், அரசாங்கத்துக்குச் சொந்தமான காணிகள் குறைந்த விலையில் விற்கப்பட இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

எவ்வித கேள்விப் பத்திரங்களுமின்றி முன்னைய அரசாங்கம் இந்நடவடிக்கையை மேற்கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கோட்டை ரயில்வே நிலையத்திற்கு முன்னாலுள்ள காணி ஒன்று, 20 இலட்சம் ரூபா பேர்ச்சுக்கு பெறுமதி கொண்டதாயினும் 90 ஆயிரம் ரூபாவுக்கு ஒரு பேர்ச் என விற்க முடிவுசெய்யப்பட்டிருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மருத்துவ உத்தியோகத்தர் புதிய சம்பளம் அறிவிப்பு

(கொழும்பு)
சுகாதார சேவையிலுள்ள துணை மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான மறுசீரமைக்கப்பட்ட புதிய சம்பளத் திட்டமொன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கண் வைத்திய உதவியாளர், சிறுவர் பற்சிகிச்சையாளர், பூச்சியியல் உதவியாளர், பல் தொழில் நுட்பவியலாளர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், மின்கதிர் பதிவாளர், மலசல கட்டட பரிசோதகர், உணவு பரிசோதகர் உட்பட 12 தரங்களில் உள்ள துணை மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு 1-1-88 தொடக்கம் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது புதிய சம்பளத்திட்டம் பின்வருமாறு: விசேட தரம் 48,000-6X1800-58800, தரம் 1 36000-15X1200 - 54000, தரம் 2 அ. 31200 8X900-10X1200-50400. தரம் 2 ஆ 25200-7X600 5X900-33900.

## ஏயர்லங்காவின் செயற்பாடு விசாரணைக்கு உள்ளாகும்

- தர்மசிறி சேனநாயக்கா

இலங்கை அரசிற்குச் சொந்தமான ஏயர் லங்கா நிறுவனத்தில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடி, வீண்விரயம் தொடர்பாக விசாரணை நடாத்த தகவல் சுற்றுலாதுறை விமான போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் ஏயர் லங்கா நிறுவனத்தினரின் தவறான நடவடிக்கைகள் காரணமாகவே மேற்படி விசாரணை நடைபெறவுள்ளதாக தெரியவருகிறது எதிர்காலத்தில் மேற்படி நிறுவனத்தின் மீது தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் என்றும் தெரியவருகிறது.

## கொழும்பில் தமிழர் மீது பொலிசார் சோதனை

(கொழும்பு)
கொழும்பிலுள்ள விடுதிகள் ஹோட்டல்களில் மீண்டும் பொலிஸ் சோதனைகள் ஆரம்பித்துள்ளன.

கடந்தவாரம், வத்தளைப் பகுதியிலுள்ள தமிழர் வீடுகளிலும், விடுதிகளிலும் பொலிசார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் தெரியவருகிறது.

(கொழும்பு)
சந்தேகத்தின் பேரில் கைதாகி வழக்குத் தொடுக்கப்படாது தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் உறவினர்களிடமிருந்து கைதாகியவர்களின் பெயர்கள், கைதான திகதி, தடுத்துவைக்கப்பட்டுருக்கும் இடம் ஆகிய விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்விபரங்களை, தாரிணி எஸ். விஜயதிலக்க செயலாளர் வெளிநாட்டு வர்த்தக, நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சு, கொழும்பு-12 என்ற முகவரிக்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

தடுப்புக் காவல் கைதிகள் தொடர்பாக அனுப்பப்படும் கடிதத்தின் இடதுபக்க மூலையில் ''தடுப்புக் காவல் கமிட்டி'' எனக் குறிப்பிடவேண்டும்.

இளைப்பாறிய நீதியரசர் ஜே எவ் சூசா தலைமையிலான இக்குழுவில், இளைப்பாறிய மேன்முறையீட்டு நீதியரசர் சிவா செல்லையா, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஏ. ஆர் சி. பெரேரா, கோலிக தர்மவர்த்தன, யென்ஸ்லி சமரஜீவா ஆகியோர் அங்கம் வகிப்பர்.

## மருத்துவ தாதிமார்களின் பட்டப்படிப்புக்கு வசதி

[கொழும்பு)
வைத்திய தாதிமார் பல்கலைக் கழகங்களில் சேர்ந்து விஞ்ஞானமாணிப் பட்டப் படிப்பை மேற்கொள்ளலாம். இதற்காக பேராதனை, சிறி ஜெயவர்த்தனபுர, கிழக்கு பல்கலைக் கழகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என ஐக்கிய பொதுச் சேவை தாதியர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

தாதிமார்க்கு ஆபத்துக் கொடுப்பனவாக ஆயிரம் ரூபா வழங்க திறைசேரி அனுமதியளித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### எம்பிலிப்பிட்டிய மாணவர் கொலை

## பிரிகேடியர் உட்பட எண்மரைக் கைது செய்ய நீதிமன்று உத்தரவு

(கொழும்பு)
எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர் கொலை தொடர்பாக 'செவன' இராணுவ முகாம் பிரிகேடியர் உட்பட எட்டு இராணுவ உத்தியோகத்தரை கைது செய்ய இரத்தினபுரி மாவட்ட நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதே வேளை எம்பிலிப்பிட்டிய மத்திய மகாவித்தியாலய அதிபரை கைது செய்யுமாறும், இவர்களை அடுத்த தவணை வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளும் போது ஆஜர் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அடுத்த மாதத்தில் நியமனம்

(யாழ்ப்பாணம்)
கொழும்பு இந்துக்கல்லூரியில் நேர்முகப்பரீட்சையில் தோற்றிய 150 பட்டதாரி பயிலுநர்களிற்கு அடுத்த மாதம் முதல் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

(88)

## லஞ்சம், ஊழல் விசாரிக்க நிரந்தர ஆணைக்குழு

பாராளுமன்றில் சட்டமூலம

(கொழும்பு)
லஞ்சம், ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதற்காக ஓர்சட்டமூலம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது

வெளிநாட்டுவர்த்தக மற்றும் நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இந்த சட்ட மூலத்தைச் சமர்ப்பித்தார்.

லஞ்சம், ஊழல் பற்றிய குற்றச் சாட்டுக்களை விசாரிப்பதற்கான நிரந்தர ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கும் 1975 ம் ஆண்டின் லஞ்சம் மற்றும் சொத்துக்கள் பொறுப்புக்களை வெளியிடுவது சம்பந்தமான சட்டத்தின் கீழ் வரும். குற்றச் செயல்கள் தொடர்பான வழக்குத் தொடரும்படி பணிப்புரை விடுப்பதற்கும் இந்தச் சட்ட மூலம் வகை செய்யும்.

மனு நிராகரிக்கப்பட்டுள்ளது-

கடந்த ஆகஸ்ட் 16-ம் திகதி உட்கமுவவைச் சேர்ந்த பட்ட சமரவீர வீரவன்னி தடுத்து வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

## அமைச்சர் பதவி தர பிரேமா விரும்பியிருந்தார்?

காமினி திசாநாயக்கா தகவல்

(கொழும்பு)
பிரேமதாசா இறப்பதற்கு 2 மாதங்களுக்கு முன் தன்னை அவரது அமைச்சரவையில் அமைச்சராக நியமிக்கப்போவதாக கூறியதாக, ஐ. தே. க ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

இது தொடர்பாக கதைப்பதற்காக கட்சியின் ஏனையோரை விட்டுவிட்டு தனியாக வரும்படி பிரேமதாசா அழைத்ததாகவும், அதற்கு இணங்க தன்னால் முடியவில்லை எனவும் காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

## கோடிக் கணக்கான புனர்வாழ்வு நிதி மோசடி

(கொழும்பு)
வடக்கு கிழக்குப் பகுதி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட கோடிக் கணக்கான நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது. இதனை விசாரிக்க விரைவில் விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்படும் என புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சர் ஏ. எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்-

திருகோணமலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்- விசாரணைகளில்குற்றவாளிகளாக காணப்படுபவர்கள் மேல் தண்டனை விதிக்கப்படும்- கடந்த அரசுகாலத்தில் அகதிகளுக்கு வீடு கட்டுவதற்கென 5 கோடி 30இலட்சம் ரூபா செலவிடப்பட்டதாககூறப்படுகின்றது. ஆனால் 53 வீடுகளாவது கட்டப்பட்டதாக தெரிய வரவில்லை,

## துறைமுகத்தில் நின்ற கப்பலில் ரி.வி· திருட்டு

(கொழும்பு)
கொழும்பு துறைமுகத்தில் கப்பல் ஒன்றிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டிகளை திருடியவர் ஒருவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்ஒருவாரத்துள்23தொலைக்காட்சிப் பெட்டிகளை இவர் திருடியுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இவரிடமிருந்து விசாரணைகளின் பின் 14 தொலைக்காட்சிப் பெட்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

## சுருக்கெழுத்தாளர் கூட்டம்

வடமராட்சி சுருக்கெழுத்து கழகத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைப் பொதுக் கூட்டம் நாளை பிற்பகல் மூன்று மணியளவில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

# மாவு, மண்ணெய் விலைகுறைப்பிற்கு கூட்டுறவு சங்கங்கள் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

கோதுமை மாவு, மண்ணெண்ணெய் ஆகிய பொருட்களிற்கான விலைக்குறைப்பு தொடர்பாக கூட்டுறவுச் சங்கங்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

அண்மையில் புதிய அரசினால் கோதுமை மாவு, மண்ணெண்ணெய் ஆகிய பொருட்களிற்கு விலைகள் குறைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினரும் மேற்படி பொருட்களிற்கான விலைகளைக் குறைத்தனர்.

இது சந்தை விலைகளை மேற்படி பொருட்கள் தொடர்பாக வீழ்ச்சியடைய வைத்தது. இதனால் மேற்படி பொருட்களை கணிசமான அளவு கையிருப்பில் வைத்திருந்த கூட்டுறவுச் சங்கங்கள் தமது கையிருப்பில் இருக்கும் பொருட்களிற்கும் விலைக்குறைப்பைச் செய்து தரும்படி புனர்வாழ்வுப் பகுதியைக் கேட்டிருந்தன. அதுபலன் அளிக்காததால் அவர்கள் புனர்வாழ்வுப் பகுதியினரின் மேற்படி பொருட்கள் தொடர்பாக விலை நிர்ணயத்தை ஆட்சேபித்துள்ளனர். ஆனால் கடந்த காலங்களில் ஏற்பட்ட விலைக்குறைப்புக்கள் கூட்டுறவுச் சங்கங்களின் கையிருப்பில் இருக்கும் அரசினால் வழங்கப்பட்ட பொருட்களிற்கும் விலைக் குறைப்பு செய்து கொடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

(88) (நி)

## விடைத்தாள் தவறியதால் மீண்டும் பரீட்சைக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பரீட்சை விடைத்தாள்கள் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளினால் தவறவிடப்பட்டதைத் தொடர்ந்து பரீட்சார்த்திகள் மீண்டும் பரீட்சை எழுத வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் கடந்த வருடம் நடைபெற்ற பரீட்சைகளில் சில துறை விடைத்தாள்கள் கொழும்பில் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளால் தவறவிடப்பட்டதைத் தொடர்ந்து திரும்பவும் அப்பரீட்சைகள் நடைபெற உள்ளதாக கொழும்பில் இருந்து யாழ் தொழில் நுட்பக் கல்லூரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

(88,தி)


### க. பொ. த (சா. த) ரப் பரீட்சை 1994

### விடைத்தாள் பரிசோதகர் விபரம் கோரல்

1994-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற உள்ள க. பொ. த (சா. த) பரீட்சைக்கு விடைத்தாள் பரீட்சகராகப் பணியாற்ற விரும்புவோரது விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் கோரியுள்ளார்.

விடைத்தாள் பரீட்சகராகக் கடமையாற்ற விரும்புவோர் விண்ணப்பப் படிவத்தினைத் தங்கள் கோட்டப் பிரதிக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி இம் மாதம் 29. 09. 1994 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் கோட்டப் பிரதிக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் வலயம் 02-ன் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அவர்கள் அறிவித்துள்ளார்.

க. கந்தசாமி
கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் வலயம்-02

(சி-10397)



### தொழில் நுட்பக்கல்லூரி இறுதிப்பரீட்சை 1993/94

பின்வரும் பாடநெறிகளுக்கான இறுதிப்பரீட்சை 1994-10-03-ம் திகதி ஆரம்பமாகுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். அன்றைய தினம் மு.ப 8 00 மணிக்கு தங்கள் பகுதித்தலைவரைச் சந்தித்து தமது அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ளவும். தமது மாணவர் பிரவேச அனுமதிச் சீட்டைத் தவறாது கொண்டுவருதல் வேண்டும்.

1. உயர் தேசிய வணிகத் தகுதித் தேர்வு 3-ம் வருடம்


## விருது வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக் கழக விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கான ''விருதுகள்'' எதிர்வரும் 28 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வைத்து வழங்கப்படவுள்ளன.

1992-93 கல்வியாண்டில் யாழ் பல்கலைக் கழகத்தில் உள்ள சகல உள்ளக, வெளியக மற்றும் மைதான நிகழ்வுகளில் சிறந்த வீரர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு ''விருதுகள் இரவில்'' விருது வழங்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக உடற் கல்விப் பணிப்பாளர் திரு சி. தியாகராசா தெரிவித்தார்.

இதில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் க குணரத்தினம் கலந்து கொண்டு பரிசில்களையும், வெற்றிக்கிண்ணங்களையும், சான்றிதழ்களையும், விருதுகளையும் வழங்குவார் என மேலும் தெரிவித்தார்.

(05)

## நரோமா பயணிகள் கவனத்திற்கு

1994-09-27-ம் திகதி 'நரோமா' கப்பலில் பிரயாணம் செய்வதற்கு பணம் செலுத்திய பயணிகள் அன்றைய தினம் காலை 8-00 மணிக்கு

கையிருப்பிலுள்ள மாவை

## நிவாரணம் வழங்குவதற்கு பயன்படுத்த யோசனை

சில கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் கையிருப்பில் இருக்கும் முன்னைய விலையிலுள்ள கோதுமைமாவை இடம்பெயர்ந்தவர்களிற்கான நிவாரண விநியோகத்திற்கு வழங்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுவருவதாக தெரியவருகிறது.

இது பாதிக்கப்பட்ட மக்களை மேலும் பாதிப்படையச் செய்யும் என்றும் மக்கள் மீது மேன் மேலும் சுமையை அதிகரிக்கும் செயற்பாடாகவே இது அமையும் என்றும் கூட்டுறவுச் சங்க கொள்கைகளிற்கு இது முரணாக அமையும் என்றும் இதை பொருளாதார ரீதியில் நொந்துபோய் இருக்கும் குடாநாட்டு மக்கள் வன்மையாக எதிர்ப்பார்கள் எனவும் தெரியவருகிறது.

(88) (நி)

## நிவாரணம் தாமதம்; மக்களுக்கு நெருக்கடி

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி ப. நோ. கூ. சங்கம் இடம்பெயர்ந்தவர்களிற்கான ஆடி மாத இறுதி இருவாரங்களிற்கான உலர் உணவு நிவாரணம் இதுவரை வழங்கப்படாததால் மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இதுபற்றி மேற்படி சங்கத்திடம் கேட்டபோது தங்களிற்கு உலர் உணவு நிவாரணத்திற்கான பொருள்கள் வந்து சேரவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஏனைய ப. நோ. கூ. சங்கங்கள் மேற்படி நிவாரண பொருட்களை கடந்த 20ஆம் திகதிக்கு முன்னதாக பெற்றுக் கொள்ளுமாறு இறுதித் திகதி அறிவித்திருந்தது. ஏனைய சங்கங்கள் மேற்படி நிவாரணத்தை விநியோகித்து முடித்துள்ள இவ் வேளையிலும்கூட மேற்படி சங்கம் நிவாரண விநியோகத்தை ஆரம்பிக்காமல் இருப்பதனால் மக்களின் விசனத்திற்கு உள்ளாகியிருக்கின்றது.

(88, சி)


### 45-ம் நாள் நினைவலைகள்

பூரண இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார்த் தீவு B M C. பொலிஸ் நிலையம் மீது 11-08-1994 அன்று விடுதலைப் புலிகளின் கொமாண்டோ அணியினர் நடாத்திய தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

பிறப்பு:
26 - 10 - 1974

வீரச்சாவு:
11 - 08 - 1994



கப்டன் குமரன்
(பாமேஸ்வான் பிரதீபன்)
நவாலி வடக்கு, மானிப்பாய்.


## யாழ்.வெள்ள நட்டஈட்டிற்கு இன்னும் அங்கீகாரமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் சென்ற வருட வெள்ள அழிவுகளுக்கான நஷ்டஈடு பெறுவதற்கான அங்கீகாரம் பாராளுமன்றத்திடம் இருந்து இதுவரை பெற்றுக்கொள்ளப்படவில்லை எனதெரியவருகின்றது.

இந்த வெள்ள அழிவுகள் தொடர்பான நஷ்டஈட்டு அறிக்கையை யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் முன்னைய பாராளுமன்றத்தில் அதன் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்திருந்தார்.

இருந்தும் அதற்கான அங்கீகாரம்வழங்கப்படாது இழுத்தடிக்கப்பட்டு வந்துள்ள வேளை பாராளுமன்றம் கலைக்கப்பட்டது புதிய பாராளுமன்றத்தில்இவ் அறிக்கையை திரும்ப சமர்ப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் இதற்கான அமைச்சும் புதிய பாராளுமன்றத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புனர்வாழ்வு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வந்த இவ் வேலைகள் சுகாதார அமைச்சிடம் மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது இதனால் மேலும் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது [பா] [தி]


FOR SCHOOL SOCIETY AND THE ASSOCIATION
O.B.A S.P.C
PRO VERITATE ET JUSTITIA

### பற்றீஷன்

தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

### PATRICIAN INSTITUTES

தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள்

வார இறுதி நாள் வகுப்புக்கள்
**01 - 10 - 1994** சனிக்கிழமையும்
வார நாள் வகுப்புக்கள்
**28-09-1994** புதன்கிழமையும்
ஆரம்பமாகும

1. Computer Processing Courses:
   - ★ BASIC
   - ★ WORD PROCESSING
   - ★ LOTUS 1 - 2 - 3
   - ★ d BASE III PLUS
2. Civil Draughtsmanship and Quantity Surveying
3. Book Keeping and Accounts
4. English Classes
5. Short-Hand and Typing (English)
6. General Motor Mechanism
7. Electrical Wiring
8. Motor Rewinding

1. உயர் தேசிய வணிகத் தகுதித் தேர்வு 3-ம் வருடம்
2. உயர் தேசிய வணிகத் தகுதித் தேர்வு 4-ம் வருடம்
3. உயர் தேசிய கணக்கியல் தகுதித் தேர்வு (புதிய பாடத்திட்டம்) 4-ம்வருடம்
4. தேசிய தொழிற் பொறிமுறைத் தகுதித்தேர்வு (Trade Courses)

- அதிபர்

தொழில் நுட்பக்கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-10394)

லுத்திய பயணிகள் அன்றைய தினம் காலை 8-00 மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறையில் சமுகமளித்து, தங்களின் பயணத்தை உறுதி செய்யும்படி மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். எக்காரணம் கொண்டும் நேரம் தாமதித்துச்செல்பவர்கள் அன்றைய தினம் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்படும்என்பதை கவனத்தில் கொள்ள வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

நவாலி வடக்கு, மானிப்பாய்.

எங்கே! எங்கே ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்!

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட சக மாவீரர்களுக்கும் இந்நாளில் எமது அஞ்சலியைத் செலுத்துகின்றோம்.

குடும்பத்தினர்
உறவினர்கள், மற்றும் நண்பர்கள்
(9498)

7. Electrical Wiring
8. Motor Rewinding
9. General Electrician


★ மேற்படி பயிற்சி நெறிகளைப் பயி விரும்புவோர் விண்ணப்பப்படிவத்தை அலுவலகத்தில் பெற்று உடன் பதிவு செய்து கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு:

REGISTRAR
**Patrician Institutes**
59, St. Patrick's Road,
Jaffna.
(சி-10396)

## நினைவலைகள்


**3-ம் ஆண்டு**



**செல்லையா பாலசிங்கம்**

பிறப்பு 20-03-1939
இறப்பு 29-09-1991

**4-ம் ஆண்டு**



**2ம் லெப். நிமலன்/சிட்டு**
(பாலசிங்கம் ஜெயவதன்)

அன்னை மடியில் 12-03-1974
கோட்டையில் விதையாக16-09-1990

திதி:- 24.09.1994

புத்தியிலே நன்கெண்ணிப் பார்த்துவிட்டான்
பூவுலக வாழ்க்கைதனை புரிந்து கொண்டான்
நித்தியமாய் தனது பெயர் நிலைத்திடவே
நீண்ட புலிப்படையிலே சேர்ந்து - மேலாம்
இத்தரையில் சுதந்திரம் சேர் தமிழ் ஈழத்தை
ஈட்டிடவே நிமலன் எண்ணங்கொண்டான்
முடிக்குரிய படையினோடு கோட்டை தன்னில்
முற்றியவெம் போரினிலே உடலம் நீத்தான்.

தும்பளை,
பருத்தித்துறை. (9482)

தாய், சகோதர,
சகோதரிகள்.

### தபாற்பெட்டிக்குள் குளவிக்கூடு

(தென்மராட்சி)

சாவகச்சேரி பிரதம தபாலகத்தினுள் வைக்கப்பட்டிருந்த தபாற்பெட்டிக்குள் குளவிக் கூடு காணப்பட்டது.

கடந்த 20-ம் திகதி பொது மகன் ஒருவர் மேற்படி தபாலகத்திற்கு சென்று வெளியூர் தபால்களை இப்பெட்டிக்குள் போட்டபோது இவரது கை விரலில் குளவி குத்திவிட்டதால் அந்நபர் கைவீக்கத்துடன் வீடு திரும்பினார் இவர் இதனைஅலுவலக ஊழியர்களிடமும் கூறியுள்ளார். (86)

### செப்டீசிமியாவினால் சிறுமி மரணம்

(தென்மராட்சி)

பண்டிதர் குடியிருப்பு பகுதியில் புதுவித காய்ச்சல் பரவியுள்ளது.


கிளாலி, கெற்பெலி, பண்டிதர் குடியிருப்பு பகுதியிலேயே இக்காய்ச்சல் பரவிவருவதாக தெரிய வருகின்றது இதனால்சிறுவர்கள் தொடக்கம் முதியோர்வரை பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்படி கிராமங்களில் இந்நோய் தொடர்ந்து பரவுவதாகவும் தெரியவருகின்றது. பண்டிதர் குடியிருப்பு பகுதியில் கடந்த 2-ம் திகதியும் ஒரு வயது சிறுமி செட்டீசிமியா நோயால் மரணமானதாக தெரிய வருகின்றது. மேற்படி பகுதியைச் சேர்ந்த பா. யஸ்ரீன் என்ற சிறுமியே இறந்ததாக தெரியவருகின்றது. (86)

## நிகழ்வாகி எம் நெஞ்சமதில்..

**மணலாற்றில் வித்தாக** | **துரோகிகளின் அழிப்பில்** | **மண்டைதீவில் வித்தாக**



கப்டன்
**வரதப்பா**
(தங்கவேலாயுதம் விஜயராஜ்)
பிறப்பு
15-12-1972
வீரச்சாவு
24-09-1991



முருகுப்பிள்ளை
**தங்கவேலாயுதம்**
(தாளையடி, மயிலிட்டி)
பிறப்பு
09-09-1946
துரோகிகள் அழிப்பு
19-06-1989



வீரவேங்கை
**ராஜ்**
(தங்கவேலாயுதம் ஜெயராஜ்)
பிறப்பு
26-08-1976
வீரச்சாவு
25-08-1990

தந்தையுடன் மைந்தர்களும் சிந்திய குருதியினால் தேசம் சிவந்தது
முந்திய தாயகத்தின் விடுதலைக்கு ஏந்திய ஆயுதங்கள் தூங்காது-நீர்
விழிமூடிக் கொண்டாலும் அழிவின்றி எம் நினைவில்
ஆழப் பதிந்துள்ளீர் சூழும் துயரை விலக்கி
மூட்டுகின்றோம் விடுதலைத் தீ.

மாவீரர் வீதி (காரைக்கால் வீதி),
இணுவில் கிழக்கு, கோண்டாவில். (இ)

-குடும்பத்தினர்

PUBLIC LIBRARY
JAFFNA

## சிந்தனைக்கு..

அரசாங்கத்திற்கு அடித்தளமாய் அமைவது பொது மக்கள் உறவு. அதைவிட அரசாங்கம் மேம்பட்டதாய் இருக்க முடியாது.

- ரூஸ்வெல்ட்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 24-09-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண்-05

## அர்த்தமற்றது

யாழ் குடாநாட்டிற்கான பாதை திறப்பு விவகாரத்தில் இறுதியாக கிளாலிக் கடற்பரப்பு-யாழ் கடல்நீரேரி மீது போக்குவரத்திற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது தொடர்பாக அரச தரப்பில் ஆராயப்பட்டு வருவதாக அறிய வருகின்றது- இது குறித்து சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவிக்கையில், ''யாழ் குடாநாட்டு மக்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு சென்று வருவதற்கென கிளாலி கடல்நீர் ஏரிப் பகுதி மீது விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்காக புதிய அரசாங்கம் தன்னால் ஆன முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது'' எனத் தெரிவித்துள்ளார்-

சிரேஷ்ட அமைச்சரின் இக்கூற்றானது, யாழ் குடாநாட்டிற்கு தரைவழிப் போக்குவரத்துப் பாதை ஒன்றினைத் திறந்து விடுவதற்கு இராணுவம் தயாராக இல்லை என்பதன் வெளிப்பாடே ஆகும். அதாவது பூநகரிப் பாதையைத் திறந்துவிட அரசாங்கத் தரப்பு எடுத்துக் கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது என்பதே ஆகும்-

அத்தோடு, அமைச்சரின் கூற்றானது, வேறு சிலவற்றையும் தெளிவுபடுத்துகின்றது இதன் பிரகாரம் கிளாலிக் கடல் மீதான தடையை நீக்குவதற்கும் அரசாங்கம் பகீரதப் பிரயத்தனங்களை செய்ய வேண்டியுள்ளது என்பதோடு இன்னமும் இது குறித்து முடிவு செய்யவில்லை என்பதுமாகும்- அதாவது கிளாலி மீதான தடையை நீக்குவதற்கும் இராணுவம் இன்னும் ஒப்புக்கொள்ளவில்லை என்பதே ஆகும்-

ஆனால், அரசாங்கம் கிளாலிப் பாதை திறப்பது, அதாவது, யாழ் கடல்நீரேரி மீது போடப்பட்ட ஆயுதப் படையின் தடையை நீக்குவதற்கு முயற்சிப்பது என்பது அர்த்தமற்றதொன்றாகும்- ஏனெனில் கிளாலிக் கடற்பரப்பின் மீது அரசாங்கம் போட்டுள்ள தடையானது இன்று பேச்சளவில் உள்ளதே ஒழிய நடைமுறையில் இல்லை என்றே கூறலாம்-

ஏனெனில், இன்று கிளாலிக் கடற்பரப்பில் - யாழ் கடல் நீரேரிப் பகுதியில் - சிறிலங்கா கடற்படையினரின் நடமாட்டத்திற்கு கடற்புலிகள் தடை விதித்துள்ளார்கள் போன்றதொரு நிலையுள்ளது என்பதே யதார்த்தமான

# விலைக் குறைப்பின் நட்டங்களை கூட்டுறவுச் சங்கங்களே ஏற்கவேண்டும்

### யாழ். செயலக அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
கூட்டுறவுச் சங்கங்களில் கையிருப்பில் இருக்கும் பொருட்களிற்கான விலைக்குறைப்பை சங்கங்களே ஏற்க வேண்டும்.

விலை மாற்றத்திற்கு போதிய அவகாசம் கூட்டுறவுச் சங்கங்களிற்கு வழங்கியிருந்தும் கூட்டுறவுச்சங்கங்கள் அதை தக்க முறையில் பயன்படுத்தவில்லை இவ்வாறு தெரிவித்தார் புனர்வாழ்வுப் பகுதி அதிகாரி ஒருவர். அண்மையில் புதிய அரசினால் கோதுமைமாவு, மண்ணெண்ணெய்ஆகிய பொருட்களிற்கு விலைக்குறைப்பு செய்யப்பட்டது.

இப்பொருட்களை கையிருப்பில் வைத்திருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக இப்பொருட்களின் விலைக்குறைப்பு தொடர்பாக ஒரு மாத கால அவகாசம் யாழ் செயலக 'புனர்வாழ்வுப் பகுதியினரால் கூட்டுறவுச்சங்கங்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. இக்கால அவகாசத்தை கூட்டுறவுச் சங்கங்கள் தக்க முறையில் பயன்படுத்தவில்லை.

இதேவேளை ஒரு சில கூட்டுறவுச் சங்கங்களில் மட்டுமே மூன்று வாரங்களிற்குத் தேவையான மேற்படி பொருட்கள் கையிருப்பில் இருந்தது ஏனையவற்றில் அதை விட குறைவாகவே கையிருப்பு இருந்துள்ளது.

இச் சந்தர்ப்பத்திலும் ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது. இதற்குக் கூடுதலான காலத்தை விலைக் குறைப்பிற்குவழங்கமுடியாது; எமது மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் மேலும் பாதிப்படைவதை நாம் அனுமதிக்க முடியாது.

இவ்வாறு யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நீண்ட நாட்களாக கோதுமைமாவு மண்ணெண்ணெய் கையிருப்பில் இல்லைஎன கூறி வந்த சங்கங்கள் சில தற்பொழுது பெருமளவு கையிருப்பில் இருப்பதாக தெரிவித்ததாக மேலும் அந்த அதிகாரி தெரிவிக்கின்றார், சில சங்கங்கள் தற்பொழுது வழங்கப்படும் மண்ணெண்ணெயை பெற்றுக் கொள்ளாமல் இருக்கின்றன.

ஆனால் அவை இச் சுற்று மண்ணெண்ணெயை மக்களிற்கு விநியோகித்து வருகின்றன இது கடந்த காலங்களில் குறிப்பிட்ட சங்கங்கள் மீளளிப்பு செய்யாமல் இருந்ததை விளக்குவதாக மேலும் அந்த அதிகாரி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். [88][நி]

கொள்ளுப்பிட்டி

## தமிழ்ப் பெண் கொலை திருட்டு காரணமல்ல

### பொலிசார் தெரிவிப்பு

(கொழும்பு)
ஊர்காவற்றுறைமுன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான வி. ஏ. கந்தையாவின் மகளான ரங்கேஸ்வரி கந்தையா (52) என்பவர் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள வீடொன்றில் கொலை செய்யப்பட்டமைக்கு திருட்டு காரணமாக இருக்கமாட்டாது என விசாரணை செய்து வரும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள வீடொன்றில் தனித்து வசித்து வந்த இப்பெண்ணின் சடலம், கொலையான ஒரு கிழமையின் பின்னரே கண்டு பிடிக்கப்பட்டது.

கொலையானவரின் உடலில் நகைகள் காணப்பட்டமையினாலும், குறிப்பிட்ட தொகைப் பணம் அவரது வீட்டில் தொடர்ந்து இருந்தமையினாலும் இக்கொலைக்கு திருட்டு காரணமாக இருக்கமாட்டாதென பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சாகரவர்த்தனா தகர்ப்பு

## கடற்படை தளபதியிடம் அறிக்கை தர பணிப்பு

(கொழும்பு)
கற்பிட்டி கடற்பரப்பில், கடற்புலிகளால் சாகரவர்த்தனா யுத்தக் கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பாக முழுமையான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மோகன் சமரசேகராவை, பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த பணித்துள்ளார்.

அறிக்கை பெறப்பட்ட பின்பே, தாக்குதல் பற்றிய விபரங்கள் அறிவிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாதுகாப்பு வட்டாரங்களின் தகவலின்படி, சிறிய, கனமற்ற, வேகப் படகுகளில் வந்த புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், வழமையாக இத்தகைய படகுகளில் 60 மாலுமிகள் வரை செல்லலாமென்றாலும், தாக்குதல் நடந்த சமயம் 42 மாலுமிகள் கப்பலில் இருந்ததாகவும் தெரிய வருவதாக கொழும்பு தினசரி ஒன்று குறிப்பிட்டுள்ளது.

## அறிமுக அட்டை வழங்கல்

மன்னார் மாவட்டத்தில் உள்ள பாலம்பிட்டி, தெட்சனாமருதமடு பெரிய பண்டிவிரிச்சான் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு அண்மையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் கமக்கார அறிமுக அட்டை வழங்கப்பட்டது.

பெரிய பண்டிவிரிச்சான் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ் அறிமுக அட்டை வழங்கும் வைபவத்தில் மன்னார் மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர், உதவி அரசாங்க அதிபர் மற்றும் அரச, அரச சார்பற்ற பிரதிநிதிகளுடன் பெருமளவு விவசாயிகளும் கலந்து கொண்டனர்

விவசாயிகளின் நன்மை கருதி வடதமிழீழம் முழுவதும் விநியோகிக்கப்பட்டு வரும் இக் கமக்கார அறிமுக அட்டைக்கு விண்ணப்பித்த அனைவருக்கும் விரைவில் அறிமுக அட்டை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்

## வீசும் காற்றினில் - - -
## விரியும் பூக்களில் - - -

அந்தப்பன்னிரு நாட்களும்
பூகோளத்தின் சுழற்சிவேகத்தில்
தளர்ச்சி தலைகாட்டியது
சூரியக்கதிரிலும் சூடுதணிந்தது
வீசும்காற்றிலும் ஈரம் கசிந்தது
ஆனால்.........
ஈழமக்களின் இதயங்கள் மட்டும்
வேகமாய்த்துடித்தன
விழிகள் மழையென
நீரைப் பொழிந்தன
வயிறுகளின் இரைப்பைகள்
வளியை உண்டன
தேசவிளக்கின் திரியாய் எங்கள்
திலீபன் எரிந்தான்
இந்தியமாயையைத் திலீபன் எரித்தான்
அவர் தம்
மெய்மை வடிவை மேதினிமுன் விரித்தான்
தண்ணீர் அருந்தா உண்ணாநோன்பு
தலைவன் முன்னால் மூட்டியவேள்வி
தம்பி திலீபன் தலைவன் வழியில்
கும்பிகருகினும் கொள்கை காத்தனன்

இமயமலைக்கு இல்லாஉறுதி
ஈழத்தமிழன் நெஞ்சில் விளைந்தது
புவி புருவம் நெறித்துக்கிடந்தது
புலிகள்
பூமியில்புதிய அவதாரங்கள் என்பதை
அகிலம் அறிந்து கொண்டது
விஞ்ஞானிகள் கவனிக்கவில்லை .........
26-09-1987 அன்றுகாலையில் ஒருகணம்.........
பூமிப்பந்து நடுங்கிக் கொண்டதை.........
திலீபன் விழிகள் மூடியவேளை
காந்தியத்தின் ஆன்மாவில் கறைபடிந்தது

கூட்டைவிட்டுத் திலீபனின் ஆவிபோயினும்
தமிழீழ
நாட்டைவிட்டுப் பிரியவேயில்லை
வீசும் காற்றினில்......விரியும் பூக்களில்......
தேசம்முழுவதும் திலீபன்......திலீபன்......
என்றும்
வாழும் அவனால் காண்போம்விடியல்

-நிலா தமிழின்தாசன்

## உறுதி சேர்த்தது நீயன்றோ!

தியாகியே திலீபனே!
உன்னையே தந்தாயே ஆகுதியாக
மண்ணையே பெரிதென நினைத்தாயே
கண்ணையே இழந்து நாம் தவிக்கிறோமடா!

## தியாகி திலீபன் நினைவு

நடமாட்டத்திற்கு கடற்புலிகள் தடை விதித்துள்ளார்கள் போன்றதொரு நிலையுள்ளது என்பதே யதார்த்தமானதாகும்- இந்தவகையில் அரசாங்கம் எடுக்கும் முயற்சியில் பயனேதும் இருக்க மாட்டாது என்பதைக் கூறவேண்டிய அவசியம் இல்லை.

அடுத்ததாக அரசாங்கம் பெயரளவில்தானும் கிளாலிக் கடற்பரப்பின் மீதான தடையை நீக்குவதினால்அதன் நோக்கங்கள் நிறைவேறப் போவதுமில்லை. ஏனெனில், யாழ் குடாநாட்டிற்கான பாதை திறப்பதென்பது யாழ் குடாநாட்டின் மீது திணிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை தளர்த்துவதற்கும், மக்கள் விரைவான போக்குவரத்தைச் செய்வதற்கு வழிசெய்வதுமே ஆகும்.

ஆனால் கிளாலிக் கடற்பரப்பின் தடை நீக்கமானது இவ்விரண்டு நோக்கங்களையும் ஒருபோதும் நிவர்த்தி செய்யப் போவதில்லை- ஏனெனில் கிளாலிக் கடல் மீதான தடை நீக்கத்தினால் போக்குவரத்தில் பெரிய எவ்விதமான மாற்றம் ஏற்படப் போவதில்லை- இலவேளை, பகலில் பயணம் செய்யலாம் என்பதை விட போக்குவரத்து வசதியிலோ அன்றி பயண நேரத்திலோ மாற்றம் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

ஆகையினால், அரசாங்கத்தின் இம்முயற்சியானது தமிழ்மக்களைப் பொறுத்து பயனற்ற முயற்சியாகவே கருதப்படும்- இதேசமயம் இம்முயற்சி மூலம் அரசாங்கத்தின் மீது தமிழ்மக்களுக்கு நல்லபிப்பிராயம் தோன்றுவதற்குப் பதில் நம்பிக்கையீனமே ஏற்பட வாய்ப்புண்டு- ஏனெனில் இந்நடவடிக்கையானது அரசாங்கத்தின் பலவீனத்தை வெளிப்படுத்துவதே காரணமாகும்-

ஆனால் இவ்வாறான நம்பிக்கையீனம் ஏற்படுவது தவிர்க்க முடியாததே- சமாதான ரீதியில் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண முற்படுவதாகக் கூறும் அரசாங்கத்தால் இச்சிறு விடயத்தில் இராணுவத்தின் நிலைப்பாட்டில் சிறிய மாற்றத்தை தானும் செய்யமுடியாத நிலையில் எவ்வாறு இச் சிக்கலான பிரச்சினையைத் தீர்த்து வைக்கப் போகின்றது என்று எழுப்பப்படும் கேள்வியே இதற்குக் காரணமாகும்- இந்நிலையில், அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு ஒன்றைக் காண உண்மையிலேயே விளையுமானால், முதலில் தனது நிலையைப் பலப்படுத்துவதோடு அரசாங்கத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். இராணுவத்தின் அழுத்தங்களுக்கு விட்டுக்கொடுப்பதையோ பணிந்து போவதையோ கைவிடவேண்டும்.

# தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரத நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவு நாட்களின் 10ஆம் நாள் நினைவாக, யாழ் குடாநாடெங்கும் வட்டரீதியாக உண்ணாவிரத நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் வலிகாமம் கோட்டத்தில், உடுவில் வட்டத்தில் சுன்னாகம் சிவன் கோயிலடியில் ஆச்சிரம முகாம், புவனேஸ்வரி அம்பாள் ச.ச. நிலையம், மத்தி ச.ச. நிலையம் என்பனவும், சங்கானை வட்டத்தில் வடக்கம்பரை அம்மன் கோவிலடியில் தனியார் கல்வி நிலையமும், சண்டிலிப்பாய் வட்டத்தில், ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடியில், மானிப்பாய் இட/முகாம் மக்களும், கோப்பாய் வட்டத்தில் நீர்வேலி கந்தசுவாமி கோவிலடி முன்றலில், இடைக்காடு மகாவித்தியாலயம், அச்சுவேலி ஆர்.சி. பாடசாலை, கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாசாலை, பத்தைமேனி இரத்தினேஸ்வரி வித்தியாசாலை, அச்சுவேலி ப.நோ.கூ. சங்கம், சமூக மேம்பாட்டு ஆர்.சி என்பனவும், யாழ்- நல்லூர் வட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில் ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள ஊழியர்களும் கலந்து கொள்வர்.

வடமராட்சிக் கோட்டத்தில் பருத்தித்துறை வட்டத்தில், மந்திகை அம்மன் கோவிலடியில் பருத்தித்துறை பிரதேசசபை, பருத்தித்துறை நகரசபை என்பனவும், கரவெட்டி வட்டத்தில் துன்னாலை கலிகைக் கந்தன் கோவிலடியில் வதிரி கணித நிலையமும், உடுப்பிட்டி வட்டத்தில், நாவலடி வைரவர் கோவிலடியில் ப.நோ.கூ. சங்கம், மொடேன் தனியார் கல்வி நிறுவனம், லிங்கா தனியார் கல்வி நிறுவனம், கலைநேசன் ச.ச. நிலையம், சந்திரோதயம் ச.ச. நிலையம் என்பனவும் கலந்து கொள்ளும்.

தென்மராட்சிக் கோட்டத்தில் கைதடி வட்டத்தில், கைதடிச் சந்தியில் தச்சன்தோப்பு ச.ச. நிலையம், இ-மு. சங்கம், வாகன உரிமையாளர் சங்கம் என்பனவும், சாவகச்சேரி வட்டத்தில், மணங்குணாப்பிள்ளையார் கோவிலடியில் சாவகச்சேரி மீசாலை சிற்றூர் நகரசபை, ஊழியர் சங்கம் என்பனவும் கொடிகாமம் வட்டத்தில், 190ஆம் கட்டை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் குட்மன் ச.ச. நிலையம், மீசாலை வடக்கு நகுலன், சிறிகாந்தன் ச.ச. நிலையங்கள் என்பனவும், பளை வட்டத்தில் இரட்டைக்கேணி அம்மன் கோயிலடியில் மாசார்சோரன்பற்றுமக்கள், வாகன சங்கம் என்பனவும் கலந்து கொள்ளும்.

தீவகக் கோட்டத்தில் அரியாலை நாச்சிமார் கோவிலடியில், வேலணை ப.நோ.கூ. சங்கம், காரைநகர் ப.நோ.கூ. சங்கம், பூதராசி, குந்தவிகுடியிருப்புக்கள், புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழகம் என்பனவும் கலந்து கொள்ளும்.

கடற்புலிகளின் பிரதேசங்களில், சுழிபுரம் சிறிகணேசா ச.ச. நிலைய முன்றலிலும், நாவலடி முனங்கு ச.ச. நிலையத்திலும், சுப்பர்மடம் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்திலும் உண்ணாவிரத நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

அறிமுக அட்டை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை விண்ணப்பிக்காத விவசாயிகளை உடனடியாக விண்ணப்பிக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 09. 24**
**சனி இரவு**

08. 01 - தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 7ம்ஆண்டு நினைவாக சிறப் நிகழ்ச்சி குலேந்திரன் எழுதிய '' தமிழீழப் பயணத்தில் திலீபன்''
08. 25 - நேயர்கடிதங்கள்
08. 30 - செய்திகள்
08. 40 - சித்திரம் - ந.கிருஷ்ணா எழுதிய '' புலரும் தமிழீழம்''

**1994. 09. 25**
**ஞாயிறு காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - களத்தில் மலர்ந்தவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின்7-ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - ந. கோகுலன் எழுதிய '' சத்தியப் போரில் திலீபன்''

கண்ணையே இழந்து நாம் தவிக்கிறோமடா!

உடல்வலு குன்றியும் உள்ளம் தளரவில்லையே
சொல்லாமல் கொள்ளாமல் எங்கையா போய்விட்டாய்
எண்ணாமல் இருக்க முடியவில்லையே - உனை
எண்ணினாலும் கண்ணெல்லாம் நீராகுதேயய்யா

ஈழத்திலே நீசர் எமக்குப் புரிந்தவஞ்சத்தை - மன
ஆழத்திலே புரிந்து கொண்டாய் நீ - அன்று
வேழமென முழங்கிய புலிவீரர்களுக்கு
ஈழமெங்கும் உறுதி சேர்த்தது நீயன்றோ!

வஞ்சகரின் முகத்திரையைக் கிழித்தெறிந்தாயே
அஞ்சாத வீரம் தமிழனது என முழங்கினாயே-திலீபா!
கெஞ்சாமல் களமாடி பெறுவோம் ஈழமதை
தஞ்சமடைய மாட்டோமிது உறுதியடா!

வெஞ்சமர் புரியும் எங்களிற்கு - வழிகாட்டும்
செஞ்சுடர் தீபம் நீயன்றோ - பெரும் படைவரினும்
அஞ்சமாட்டோம் இறுதிவரை தளரமாட்டோம்
வஞ்சகரை அழிப்போம் உன்மேல் ஆணையடா!

காந்தியின் படத்தைக் காணவில்லையே
ஏந்தி நிற்கிறோம் உன் படத்தை மனதிலே
சாந்திபெறுவாய் ஈழத்தாய் மடியினிலே
நீந்திக்கரை சேர்வோம் உன் நினைவுடனே!

-கி. தினேஸ்

# விவசாயிகளுக்கு கடன் அறிவிப்பு கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கத் திட்டமிடப்பட்ட கடன் தொடர்பாக இலங்கை வங்கியின் தலைமைஅலுவலகத்திலிருந்து எதுவித தகவலும் கிடைக்கவில்லை என்று இலங்கை வங்கியின் யாழ்ப்பாண மாவட்ட முகாமையாளர் கூறியுள்ளார்.

அவர் இது பற்றி மேலும் கூறுகையில் மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாக விவசாயிகளுக்கு இக் கடனுதவி வழங்கப்பட வேண்டுமெனவும், அப்போதே விவசாயிகள் இக் கடனின் மூலம் பயனடைய முடியும் எனவும் இலங்கை வங்கியின் தலைமையகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அங்கிருந்து எதுவித தகவலும் கிடைக்கப் பெறாமையினால் இக்கடனை வழங்க முடியாமல் இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

(சி.நி)

## பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

வட இலங்கைச்சுதேச வைத்திய சபையின் பொதுக்கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு யாழ் பஸ்நிலையத்துக்கு முன்பாகவுள்ள யாழ் லங்காசித்த ஆயுர்வேதக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

# ஜனாதிபதி தேர்தலில் ஆறுபேர் போட்டி

நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஆறுபேர் போட்டியிடவுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் காமினி திசாநாயக்காவும் போட்டியிடவுள்ளனர்.

இதேவேளை முன்னைய ஐ. தே. க. அரசாங்கத்தின் அமைச்சர் ஏ ஜே. ரணசிங்கா ஐக்கிய தேசியக் கட்சி (பிரேமா அணி) என்ற பெயரிலான அமைப்பினை அமைத்து அதன் சார்பில் போட்டியிடவுள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் ஜே. வி. பியின் சார்பில் சோமவன்ச அமரசிங்காவும் சிங்களபூமி புத்திர பெரமுனவின் சார்பில் அதன் தலைவர் ஹரிச்சந்திர விஜேதுங்காவும் போட்டியிடவுள்ளனர் எனவும் ரெலோ குழுவினர் போட்டியிடவுள்ள போதும் வேட்பாளர் தெரிவாகவில்லை எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## துக்கத்தால் தவித்தவரிடம் நகைகள் திருட்டு

(தென்மராட்சி)

மாமியாரின் மரணச் செய்தியைக் கேட்டுதான் கொண்டு வந்த பைகளை வீட்டிற்கு முன்னால் கைவிட்டு, வீட்டிற்குள் ஓடிய கொழும்பு பயணி ஒருவரிடமிருந்து ஐந்தரை பவுண் தங்கநகை திருடப்பட்ட சம்பவமொன்று தென்மராட்சியில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது: தச்சன் தோப்பு பகுதியைச் சேர்ந்த சந்திரவதனி என்பவர், கிளாலியூடாக, தனது வீட்டை வந்தடைந்த சமயம், மாமியார் இறந்த செய்தியைக் கேட்டார், இதனால், தான் கொண்டு வந்த பைகளை வீதியில் போட்டு விட்டு அழுதபடி வீட்டினுள் சென்றார். பின் மீண்டும் வந்து பைகளை எடுத்தபோது அதிலொன்றிலிருந்த ஐந்தரைப் பவுண் நகை மறைந்[illegible] கிட்டார். இச்சம்பவம் பற்றி சாவகச்சேரி காவல்துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது.

(86)

---

**இன்று 24-09-94**

### பட்டிமன்றம்
[பாடலில்]

24-09-94 சனி இரவு 8.00 மணி

**முத்தெட்டுமடம் ஞானவயிரவர்கோவில் பூங்காவன உற்சவம்**

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு.

மங்கள இசை:- திரு. என். கே. உதயநாதன் குழுவினர்.

**"எவர் பாடலில் தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி நிற்கிறது?"**

நடுவர்: பொன். கணேசமூர்த்தி

| கவிஞர்: பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் | கவிஞர்: கவியரசு கண்ணதாசன் |
|---|---|
| கலைக நாகேஸ்வரன் எம்.ஏ. | எம். எஸ். தயாளன் பி.ஏ. |
| பிரிட்டோ ஆங்கில ஆசிரியர் | எஸ். கணேசலிங்கம் அதிபர் |
| பசு. ஸ்ரீபதி. நாடக ஆசிரியர் | வாமன் ஆசிரியர் |
| செ.சத்தியமூர்த்தி பி.எஸ்.சி. | பொன். மதிமுகராஜா ஜே பி |

பட்டிமன்ற அமைப்பு:

---

எம்பிலிப்பிட்டிய மாணவர் விவகாரம்

# பாடசாலை அதிபர், படை அதிகாரிகள் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டியவில் 1989ல் 327 பாடசாலைச் சிறுவர்கள் காணாமற் போனமை தொடர்பாக பொலிசாரால் எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்களும் அடுத்த மாதம் ஏழாம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய முன்னாள் பாடசாலை அதிபர் தயானந்த லொக்கு கலபதி, மேஜர் ஜாலியாளபா, கப்டன் கமேஷ் கினிகே, கப்டன் வஜிரசமரசிங்க, இராணுவ சிப்பாய் ஜக்சன் அத்துக்கல ஆகியோரே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஆவர் மேலும் மூன்று இராணுவ அதிகாரிகள் இது தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்டபோதிலும் அவர்கள் நீதி மன்றில் ஆஜராகவில்லை இவர்களை கண்டுபிடித்து அடுத்த சில தினங்களில் நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது பிரிகேடியர் ரோகித லியனகே லெப். சமிந்த கலபதி, சார்ஜண்ட் சமரதுங்க ஆராச்சிலாகே சேனரத், கோப்ரல் உபுல்சந்திர ஆகியோரே ஆஜர் செய்யப்படாத படையினராவர்.

# ராணுவத்திற்குபிணைவழங்க நீதி மன்றம் மறுப்பு

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய மாணவர் காணாமற் போனமை தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளுக்கு பிணை வழங்கப்பட வேண்டும் எனவும் அல்லாவிடின் இராணுவத்தின் மத்தியிலுள்ள உறுதிநிலை குலைந்து விடும் எனவும் இராணுவ சட்டத்துறைப்பிரிவைச் சேர்ந்த லெப். கேணல் மொகாந்தி பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கூறுகையில் வன்செயல்கள் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த நிலையில் இவ் அதிகாரிகள் எம்பிலிப்பிட்டிய பகுதியில் கடமையாற்றியவர்கள் எனவும் அச் சூழ்நிலையில் பணியாற்றிய இவர்களுக்கு பிணை வழங்காது விட்டால் அவர்கள் மத்தியில் உறுதி குறைவது தவிர்க்கப்படமுடியாதது என்றும் அவர் கூறினார்.

இவர்கள்தொடர்ந்தும்இராணுவச் சேவையில் இருப்பதால் இவர்களை இராணுவப் பாதுகாப்பில் விடவேண்டும் இவர்களுக்கு உயிராபத்து உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த நீதிபதி, தற்போது வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளமையால் இவர்களை இராணுவப் பாதுகாப்பிற்கு விடமுடியாது என தெரிவித்தார்.

## சூரியகந்தவில் மேலும் 3 இடங்கள் தோண்டப்படும்

சூரியகந்தவில் மேலும் மூன்று இடங்கள் தோண்டப்படவுள்ளன. இம்மாதம் 29 ஆம், 30 ஆம் திகதிகளில், புதைக்கப்பட்டவர்களின் எலும்புக்கூடுகளை கண்டுபிடிக்க அகழ்வு வேலைகள் மேற்கொள்ளப்படும் இதற்கான உத்தரவை எம்பிலிப்பிட்டிய நீதிபதி விடுத்துள்ளார்.

மக்கள் வங்கி வேலைவாய்ப்பு

## கொழும்பில் 20 பேருக்கு நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வில் தெரிவானோரில்இருபது பேருக்கு கொழும்பில் மற்றொரு நேர்முகத்தேர்வுநடைபெறவுள்ளது.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வு மக்கள் வங்கி ஆளணி முகாமையாளரினால்அக்டோபர் 20-ம் திகதியளவில் நடாத்தப்படலாம் என தெரியவருகிறது. வதற்கென நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தோரில் 61 பேர் தெரிவு செய்யப்பட்டு நேர்முகத்தேர்வு இடம் பெற்றது தெரிந்ததே.

இவர்களுள் மக்கள் வங்கிக்கு 20எழுதுவினைஞர்களை தெரிவு செய்வதற்காகவே இந் நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

இவர்கள் 20 பேருக்கும் நேர்முகத் தேர்விற்கான கடிதங்கள் யாழ் செயலகத்தி

### ஆரோக்கிய அன்னை வருடாந்த திருவிழா

யாழ். போதனா வைத்திய சாலையில் அமைந்துள்ள சிற்றாலயத்தின் பாதுகாவலியான ஆரோக்கிய அன்னையின் வருடாந்தத் திருநாள் நாளை கொண்டாடப்படும். இன்று மாலை 5 15 மணிக்குத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து நற்கருணை வழிபாடும் நடைபெறும் நாளை காலை 6 30 மணிக்குத் திருநாட் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

### விபத்தில்

---

மூதூரில் ராணுவம் தாக்குதல்

# ஆதரவாளர் வீரச்சாவு பொதுமகனும் பலி

திருமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

கடந்த 21ஆம் திகதி காலை 10 மணியளவில் மூதூர் கைமுந்தான் எனுமிடத்தில் நடந்தது. இத் தாக்குதலில் தங்கராசா இதயசுந்தரம் / அழகன் (மூதூர்) என்பவரே வீரச்சாவடைந்தவராவார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

இதேவேளை இராணுவத்தினரின் இத்தாக்குதலின் போது மூதூர் கட்டைபறிச்சானைச் சேர்ந்த நேசதுரை ஒளீஸ்வரன் (வயது 18) என்பவரும் கொல்லப்பட்டுள்ளார்.

## வீதியில்சென்றபெண்ணிடம் பகலில் பணம் பறிப்பு

வீதியால் சென்ற பெண்ணிடம் பட்டப்பகலில் பணம் பறித்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. மாலிசந்திக்கும் மந்திகைக்குமிடையில் இத் துணிகரச் சம்பவம் நடந்தது.

மேற்படி பெண் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பணிபுரிபவர் எனவும் அவர் தனது கடமைக்கு துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்தபோது இனம் தெரியாதவர்கள் அவரை மறித்து அவரது கைப்பையை எடுத்து அதற்குள் இருந்த 200 ரூபா பணத்தை திருடிக்கொண்டு தலைமறைவாகி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (யோ)

## குண்டை எடுத்து குத்திய சிறுவன் படுகாயம்

(மாங்குளம்)

அநாதரவான நிலையில் கிடந்த குண்டு ஒன்றை எடுத்து குத்திப்பார்க்க முற்பட்ட வேளை அது வெடித்ததில் சிறுவன் ஒருவர் படுகாயமடைந்தார்.

மாங்குளம் பகுதியில் நேற்று மாலை 3-30 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தால் உடல் முழுவதும் படுகாயமடைந்த நிலையில் இராமநாதன் விஜிதரன் (வயது 9) என்ற சிறுவன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டபின் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## சமாதான முயற்சிகளுக்கு கப்பல் மூழ்கடிப்பு உதவாது

காமினி திசாநாயக்கா தெரிவிப்பு

[கொழும்பு]

கடற்படைக் கப்பல் மூழ்கடிப்பானது சமாதான முயற்சிகளைமுன்னெடுத்துச் செல்ல உதவாது என எதிர்க் கட்சித் தலைவர்காமினிதிசாநாயக்கா தெரிவித்துள்ளார். இச் சம்பவம் குறித்து நான் வேதனைப்படுகிறேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாவற்பழம் பறித்தோர் மீது

## படையினர் தாக்குதல் மூன்று பொதுமக்கள் பலி

(வவுனியா)

கடந்த வாரம், வவுனியா, கற்குளம் பகுதியில் நாவற்பழம் பறித்தோர் மீது படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பகுதியில் நென்றபாம், டொலர்பாம் ஆகிய முகாம்களிலிருந்து பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது பலத்த எறிகணைத் தாக்குதல்களை கடந்த வாரம் மேற்கொண்ட

பட்டிமன்ற அமைப்பு:
பொன். மதிமுகராஜா ஜே. பி.
எம். ஜி ஆர். இல்லம், தாவடி.

கோண்டாவில்.
24-09-94
(சி-10398)

- பூங்காவன திருவிழா
உபயகாரர்
கோண்டாவில் மக்கள்.

# நாளை 25-09-94

## முத்தமிழ் பட்டிமன்றம்
(இயல், இசை, நடிப்பு)

# எவர் பாடலில் தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி நிற்கிறது?

| | |
|---|---|
| கவிஞர் | கவிஞர் |
| பட்டுக்கோட்டை | கவியரசு |
| கல்யாணசுந்தரம் | கண்ணதாசன் |

நடுவர்: பொன். கணேசமூர்த்தி

| | |
|---|---|
| செ. சத்தியமூர்த்தி B Sc | பொன். மதிமுகராஜா (J P) |
| பசு. ஸ்ரீபதி ஆசிரியர் | S சகிணசலிங்கம் (B.A.) |
| பிரிட்டோ ஆங்கில ஆசிரியர் | வாமன் ஆசிரியர் |
| கனக. நாகேஸ்வரன் (M.A.) | M. S. தயாளன் (B A.) |

S- கணேசலிங்கம் (அதிபர்)

இடம்: கரைப்பிரான் பிள்ளையார் கோவில்
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

காலம்: 25-09-94 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: 8-00 மணி (இரவு)

ஆசியுரை: பிரம்மஸ்ரீ ஏ. சர்மாஜி

தலைமையுரை: அ. குமாரவேலு (B.A.)

நன்றியுரை: மா. தியாகராஜா (சட்டத்தரணி)

பட்டிமன்ற அமைப்பு: பொன். மதிமுகராஜா (J.P)

எம். ஜி. ஆர். இல்லம்
தாவடி.

[சி-10399]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

...த்தப்படலாம் என தெரியவருகிறது.

மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பு...

...தங்கள் யாழ் செயலகத்தினால் அனுப்பி வைக்கப்படும் என செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (சி,தி)

# அறிவியல் வினாடி-வினா ஹாட்லி முதலிடம்

(பருத்தித்துறை)

கரும்புலிகள் தினமான யூலை 5 ஐ ஒட்டி ஆரம்பிக்கப்பட்டு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரால் பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்களிடையே நடாத்தப்பட்ட அறிவியல் வினாடி வினா போட்டித் தொடர்-2 இல் ஹாட்லி கல்லூரி முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

பருத்தித்துறை கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட இப்போட்டியில் வேலாயுதம் மகா வித்தியாலயம், ஹாட்லி கல்லூரி, வடஇந்து மகளிர் கல்லூரி, வல்வை மகளிர் மகா வித்தியாலயம், மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலைகள் கலந்து கொண்டன.

கடந்த 17ம் திகதி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் யாழ்மாவட்ட மாணவர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் திரு. சி. தமிழ்மறவன் தலைமையில் நடைபெற்ற இவ்வினாடி-வினாப் போட்டியில் ஹாட்லிக் கல்லூரி முதலாமிடத்தையும், வேலாயுதம் மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

மேலும் இப்போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவியான சி. ஸ்ரீவதனி மற்றும் பார்வையாளர்களுக்கான போட்டியில் வடஇந்து மகளிர் கல்லூரி மாணவியான செ. தாமரைச்செல்வி ஆகியோரும் சிறப்புப் பரிசினைத் தட்டிக் கொண்டனர்.

## வீதி விபத்தில்

யோ. பார்வதி (வயது 56) ஏழாலை, எஸ் பூ'தி (வயது 60) யாழ்ப்பாணம், என். நிறஞ்சினி (வயது 22) யாழ்ப்பாணம் ஆகியோரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர். [88. சி]

## காணாமற்போன

வில்லை.

தேடிச் சென்றவர்கள் மீட்டு வந்துள்ள மரக்கோல், சவள் ஆகியவற்றில் துப்பாக்கிச் சூட்டு அடையாளங்கள் ஒன்றுக்கும் அதிகமாகக் காணப்படுகின்றன (21)

## புதிய

ளார்.

...றைசேரியில் ஏற்பட்டுள்ள நிதிப்பற்றாக்குறையே இந்த அறிவித்தலுக்குக் காரணம் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (தி) (சி)

## ஐப்பசி

முன்னெடுக்கப்பட்டுவருகின்ற போதிலும் சூழல் பாதுகாப்பில் முக்கியத்துவம் பெறும் மரம் நடுகைக்கு தமிழீழத்தில் பொருத்தமான காலப் பகுதியாக ஐப்பசி மாத மழை காலம் பொருத்தமாக உள்ளமையால் இக் கொடிவாரத்தில் மக்கள் மத்தியில் மரநடுகைக்கான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த மரநடுகையை ஊக்குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே தமிழீழ மக்கள், மாணவர்கள், விவசாயிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே கொடியின்கீழ் இணைந்து இவ் வாரத்தை உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பதுடன் தேசத்தின் நலன்கருதி ஆளுக்கொரு மரக்கன்றையாவது நடுகை செய்து இந்நிகழ்வில் பங்கேற்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுள்ளது.

# விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி சந்தியில் துவிச்சக்கர வண்டியும் காரும் விபத்துக்குள்ளானதில் துவிச்சக்கரவண்டியில் வந்தவரான இளம்பெண் படுகாயமடைந்தார்.

மேற்படி விபத்தில் தவறஞ்சினி (வயது 20) என்பவரே படுகாயமடைந்தவராவார். நினைவிழந்த நிலையில் யாழ். போதனா மருத்துவ மனைக்கு எடுத்துவரப்பட்ட இவர் ஒழுங்காக பேசஇயலாத நிலையில் உள்ளார். (சி)

# பூரான் கடித்து பெண் மரணம்

(வடமராட்சி)

வெள்ளைப் பூரான் கடித்து இளம் பெண் ஒருவர் மரணமடைந்தார்.

அல்வாய் மேற்கைச் சேர்ந்த செல்வராசா மனோரஞ்சனி (18) என்பவரே நேற்று முன் தினம் பரிதாபகரமாக மரணமடைந்தார். (யோ)

# நிரந்தர நியமனம்

பட்டதாரிச் சம்பளத் திட்டத்தில் அமர்த்தப்படாத பட்டதாரி ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை அன்று பிற்பகல் 2.00 மணிக்கு நல்லூர் கல்விக் கோட்டத்தில் வைத்து வழங்கப்படும். உரிய ஆசிரியர்களை வந்து பெற்றுக்கொள்ளுமாறு நல்லூர் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்

# கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை நடைபெற இருந்த வட இலங்கை சுதேச வைத்திய சபையின் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பின்போடப்பட்டுள்ளதாக மேற்படி சபையின் அதிபர் நா. வாமதேவன் அறிவித்துள்ளார்.

...பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஏழு பேர் வரை காயமடைந்துள்ளனர்.

குறிப்பிட்ட பகுதியில் பதுங்கியிருந்த இராணுவத்தினர் இத்தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை, மணலாறு

## ஜே, ஆர்-

மூலம் தெரிய வந்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. கப்பல் தகர்ந்ததும் கடற் புலிகளின் படகுகள் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்த ஆரம்பித்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மூழ்கடிக்கப்பட்ட சாகரவர்த்தனா 20 கோடி ரூபா பெறுமதியானது என மதிப்பிடப்பட்டுள்ளது என கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்தது.

மேலும் இது ஐ தே க. ஆட்சிக் காலத்தில் தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலி தலைமையில் கொள்வனவு செய்யப்பட்டு 1984 ஜூலை மாதம் சிறிலங்கா கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை மூழ்கடிக்கப்பட்ட கப்பலினை மீட்கும் முயற்சிகள் நடைபெறுவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

## கேணல் கிட்டு

ஏற்பாட்டினைச் செய்து கொள்ளலாம் எனவும் பூங்கா பொறுப்பாளர் அறியத்தருகிறார்.

## 48 மணி

மேலும் மட்டக்களப்பிலும் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இரு இராணுவத்தினர் காயமடைந்ததாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தது.

## வீரச்சாவு

வீரச்சாவடைந்த கப்டன் இளம்பிறை / சசிக்குமார் (தர்மரட்ணம் சுதாநாதன்- மட்டக்களப்பு), இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

கணைத் தாக்குதல்களை கடந்த வாரம் மேற்கொண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# விசேட அறிவித்தல்

லெப். கேணல் திலீபனின் இறுதி நினைவுநாளைநினைவுகூரும் வகையில் திங்கள் அன்று அங்கத்துவ நிறுவனங்கள் அங்கத்தவரது உற்பத்திகளை கொள்வனவு செய்வதுடன் தமது நடவடிக்கைகளை நிறுத்தி தியாகியை நினைவுகூர ஏற்பாடு செய்யப்பட்ட பொது நிகழ்வில் அங்கத்தவர், பணியாளர், மகளிர் குழுக்கள் முழுமையாகக் கலந்து உண்ணா நோன்பிருந்து அஞ்சலி செலுத்துமாறு வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கேட்டுள்ளது.

# மாதாந்த கலந்துரையாடல்

வடமராட்சிக்கோட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களின் மாதாந்த கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 30 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி பாடசாலையில் நடைபெறும்.

## தியாகி

வப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்

இதேவேளை தியாகி திலீபனின் நினைவாக நேற்று பல இடங்களில் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன.

யாழ். செயலக வளவில், செயலக ஊழியர்களினால் நேற்று சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. பல ஊழியர்கள் இதில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது இறுதியில் நடைபெற்ற பொதுக் கூட்ட நிகழ்விலும் பலர்கலந்து கொண்டனர்.

யாழ். பல்கலைக் கழகத்தில் தியாகி திலீபனின் நினைவாக நேற்று உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த உண்ணாவிரத நிகழ்வில் பெருமளவிலான மாணவர்களும், விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும், ஊழியர்களும் கலந்து கொண்டனர். (தி)